# STUDY MATERIAL FOR SECOND YEAR STUDENTS

# TAMIL

# SEMESTER – III

KAMARAJ S COLLEGE

## ACADEMIC YEAR 2024-25

## PREPARED BY

## TAMIL DEPARTMENT

# INDEX


| UNIT | CONTENT | PAGE NO |
|---|---|---|
| I | தொல் பழங்கால வரலாறும் சங்ககால வரலாறும் | 03-23 |
| II | ஆட்சியர் வரலாறு | 24-38 |
| III | ஐரோப்பிய கால வரலாறு | 39-46 |
| IV | விடுதலைக்குப் பின் தமிழ்நாட்டு வரலாறு: | 47-52 |
| V | மொழிப்பயிற்சி | 53-60 |


KAMARAJ WOMENS COLLEGE

# அலகு - 1

## தொல் பழங்கால வரலாறும் சங்ககால வரலாறும்

### தொல்பழங்காலம்

தொல்பழங்காலம் என்பது கற்காலம் தொடங்கிய காலத்துக்கும், மனிதர்களுக்கு எழுதும் பழக்கம் தோன்றியதற்கும் இடைப்பட்ட காலம் எனக் கருதப்படுகிறது. இது 3.3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் கல் கருவிகள் பயன்படுத்தத் தொடங்கியது முதல் 5300 ஆண்டுகளுக்கு முன்பு எழுதும் முறைமைகள் கண்டுபிடிக்கப்பட்டது வரையிலான காலம் என்று வரையறுக்கப்படுகிறது.

மெசபடோமியாவில் உள்ள சுமேரிய நாகரிகம், சிந்து சமவெளி நாகரிகம், பண்டைய எகிப்து நாகரிகம் ஆகியவை முதன்மை நாகரிகங்கள் ஆகும். இவை தங்களுக்கு சொந்த எழுத்துக்களைக் கொண்டிருந்தன. வரலாற்று பதிவுகளை உருவாக்கின.

இது வெண்கலக் காலத்திலேயே தொடங்கி விட்டது. அண்டை நாகரிகங்கள் இவற்றைப் பின்பற்றின. மற்ற பெரும்பாலான நாகரிகங்கள் இரும்புக் காலத்தின் போது தொல்பழங்காலத்தின் இறுதியை அடைந்துவிட்டன. தொல்பழங்காலத்தில் மூன்று கால அமைப்புகள் உள்ளன. அவை கற்காலம் வெண்கலக் காலம், மற்றும் இரும்புக் காலம் ஆகியவை. ஐரோவாசியா மற்றும் வட ஆப்ரிக்கா ஆகியவற்றில் உலோகப் பயன்பாடு மிகுந்து இருந்தது அமெரிக்கா, ஓசியானியா, ஆஸ்திரேலியா மற்றும் சப்-சஹாரா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் இதன் தாக்கம் குறைந்திருந்தது. ஆனால், இங்கு புதிய கலாச்சாரங்களுடன் அதிக அளவு கடின உலோகப் பயன்பாடு கொண்ட வேலைகள் நடைபெற்று வந்தன. அமெரிக்காவில் முன் கொலம்பிய நாகரிகங்கள் ஏற்படும் முன்னும், ஐரோவாசியகள் கலாச்சாரத்திற்கு முன்னும், சிக்கலான எழுத்து முறைமைகள் அறியப்படவில்லை. மிகச் சமீப காலங்களில் இவை முன் வரலாற்றுக் காலத்தை எட்டின.

யூரேசியாவுக்கு வெளியே உள்ள பல கலாச்சாரங்களில் எழுது பொருட்கள் வெவ்வேறு காலங்களில் அறிமுகமாகின. எழுது பொருட்களின் புழக்க காலமே உள்ளூர் வரலாற்றுக் காலமாகும். அதன்பின் எழுத்துமுறை என்பது வெற்றிக் கலாச்சாரமாக அறியப்பட்டது. முன் கலாச்சாரங்கள் எழுதப்பட்டன. தொல்பழங்காலத்தைப் பற்றி எழுதப்பட்ட பதிவுகள் ஏதும் இல்லை. எனவே வரலாற்றுக்கு முந்தைய காலப் பொருட்களின் வயதைக் கணிப்பது கடினமாக உள்ளது. 19 ஆம் நூற்றாண்டு வரை காலத்தை கணிப்பதற்கான தெளிவான நுட்பங்கள் அறியப்படவில்லை.

KAMARAJ WOMENS COLLEGE

**தொடக்கம்**

அண்டம் அல்லது பூமி தோன்றியதிலிருந்து உள்ள இடைவெளிக் காலம் அல்லது அதிகளவில் குறிப்பிடப்படுவதுபோல் பூமியில் உயிர்கள் தோன்றியதிலிருந்து உள்ள காலம் அல்லது மிகக் குறிப்பாக கூறுவோமானால் மனிதன்-போன்ற உயிரினங்கள் தோன்றியது முதல் உள்ள காலம் "முன் வரலாற்றுக் காலம்" அல்லது தொல்பழங்காலம் என்பதன் தொடக்கம் என்று வரையறுக்கப்படுகிறது.

## இறுதி

ஒரு மதத்திலோ அல்லது பிராந்தியத்திலோ, முன் வரலாற்றுக் காலம் அல்லது தொல்பழங்காலத்தின் இறுதி என்பது, அந்த மதத்தில் அல்லது பிராந்தியத்தில், அவை தொடர்பாக எழுதப்பட்ட வரலாற்றுப் பதிவுகள், ஒரு அறிவுசார் வளமாக பயன்பாட்டுக்கு வந்த காலமாகும். எழுத்தில் வரலாற்றுப் பதிவுகள் வரத் தொடங்கிய காலத்துடன், அந்த மதம் அல்லது பிராந்தியத்திற்கான தொல்பழங்காலம் முடிவுக்கு வருகிறது.

**உதாரணமாக:**

- சுமார் கி. மு. 3200ல் எகிப்தின் முன் வரலாற்றுக் காலம் முடிந்தது
- மிகச் சமீபத்தில், சுமார் கி. பி. 1900ல் நியூ கினியாவின் முன் வரலாற்றுக் காலம் முடிந்தது
- ஐரோப்பாவில் கிரேக்கம், பண்டைய ரோம் மற்றும் அண்டை கலாச்சாரங்களில் ஒப்பீட்டளவில் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட பாரம்பரிய கலாச்சாரங்கள் இருந்தன

**கால அளவுகள்**

**வரலாற்றுக்கு முந்தைய காலத்தை பிரிக்கும் முறைகள்:**

- வரலாற்றாசிரியர்கள் பொதுவாக மூன்று வயது அமைப்புகளைப் பயன்படுத்துகின்றனர்
- அறிஞர்கள் வரலாற்றுக்கு முந்தைய காலத்தைக் கணக்கிட நன்கு வரையறுக்கப்பட்ட புவியியல் பதிவுகள் மற்றும் அதன் சர்வதேச அளவில் வரையறுக்கப்பட்ட அடுக்கு மண்டல புவியியல் நேர அளவைகளைப் பயன்படுத்துகின்றனர்

வரலாற்றின் முற்பகுப்பானது, மூன்று தொடர்ச்சியான காலங்களில்இ பகுக்கப்பட்டது. அவற்றின் அடிப்படையில் முக்கிய கால அளவிடல் கருவி தொழில்நுட்பங்கள் திட்டமிடப்பட்டன.

KAMARAJ WOMENS COLLEGE

- கற்காலம்
- வெண்கலக் காலம்
- இரும்புக் காலம் [4]

## கற்காலம்

### பழைய கற்காலம்

பழைய கற்காலம், கல் கருவிகள் பயன்பாட்டைக் முதலாகக் கொண்டு தொடங்குகிறது. பழைய கற்காலம் என்பது ஆரம்ப காலக் கற்காலமாகும்.

பழைய கற்காலத்தின் ஆரம்பப் பகுதி கீழ்ப் பழைய கற்காலம் என அழைக்கப்படுகிறது. இது சுமார் 2.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஹோமோ ஹபிலிஸ்களையும் (Homo habilis), தொடர்புடைய இனங்களையும், அதிலிருந்து வந்த மனித சேப்பியன்களின் (Homo sapiens) வாழ்வையும், அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கல் கருவிகளையும் குறிக்கிறது.[10]

ஆரம்பகால மனித சேப்பியன்கள் சுமார் 200,000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருந்தன. இது மத்திம பழைய கற்காலம் என்று அழைக்கப்படுகிறது. மத்திம பழைய கற்காலத்தின்போது நவீன மொழி திறனைக் குறிக்கும் உடற்கூறு மாற்றங்கள் எழுகின்றன.[11]

மத்திம பழைய கற்காலம் முழுவதும், மனிதர்கள் பொதுவாக நாடோடிகளாகவும், வேட்டைக்காரர்களாகவும், நாடோடி வேட்டைக்கார சமூகங்களாகவும் வசித்து வந்தனர். இச்சமூகங்கள், சிறியனவாகவும், மனித சமூக சமத்துவம் உடையதாகவும் இருந்தன. இச்சமூகங்கள்இ ஏராளமான இயற்கை ஆதாரங்களைப் பெற்றிருந்தன. மேம்பட்ட உணவு-சேமிப்பு நுட்பங்களைக் கொண்டிருந்தன. சில சமயங்களில் சிக்கலான சமூக கட்டமைப்புகளுடன் கூடிய ஒழுக்கமான வாழ்க்கை முறையைப் பின்பற்றின.

## இடைக் கற்காலம்

இடைக் கற்காலம் என்பது கிரேக்க மொழியில் "mesos=நடுத்தர", மற்றும் "lithos=கல்" என்பதைக் குறிக்கிறது. பழைய கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடையே உள்ள மனித தொழில்நுட்ப வளர்ச்சி, இடைக் கற்காலத்தின் தாக்கம் ஆகும். இந்த காலத்தில் காடழிப்புக்கான முதல் அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டன. விவசாயம் செய்வதற்கு நிலங்கள் தேவைப்பட்டதால் அவர்கள் காடுகளை அழித்தனர். இது நவீன கற்காலத்திற்கான ஆரம்ப அறிகுறியாகும்.

KAMARAJ WOMENS COLLEGE

## புதிய கற்காலம்

புதிய கற்காலம் பழைய கற்காலத்தில், பல வகை மனிதர்கள் வாழ்ந்திருக்கலாம். எனினும், புதிய கற்காலத்தில் ஹோமோசெபியன்ஸ் மட்டுமே இருந்தனர். புதிய கற்காலம் என்பது நடத்தைகள், கலாச்சார பண்புகள், நடத்தை மாற்றங்கள், கலாச்சார மாற்றங்கள் ஆகியவற்றின் முன்னேற்றமாகும், இது, காட்டுப் பயிர்கள், உள்நாட்டுப் பயிர்கள், காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள் ஆகியவற்றின் பயன் தெரிந்த காலமாக இருந்தது.

12,200 ஆண்டுகளுக்கு முன்பு, புதிய கற்காலத் தொடக்கம் வரை, புளோரெஸ் மனிதன் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. இது பழமையான தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சி ஆகியவற்றுக்கான ஒரு காலமாகும். இது கி.மு. 10,200ல் மத்திய கிழக்கில் சில பகுதிகளிலும், பின்னர், உலகின் பிற பகுதிகளிலும், பரவியது. கி.மு. 4,500ல் புதிய கற்காலம் தொடங்கி கி.மு. 2,000ல் முடிவுற்றது.

## உலோக காலம் (Metal Age)

புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த காலம் செம்பு கற்காலம் எனப்பட்டது. இக்காலத்தில் செம்பு மற்றும் வெண்கலம் ஆகிய உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன. மனித குல வரலாற்றில், உலோகத்தை உருக்கிவார்க்கும் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்ததும் உலோகத்திலான பொருட்களை உருவாக்கி பயன்படுத்தியதும் முக்கிய நிகழ்வுகளாகும்.

ஆனால், கற்கருவிகளும் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வந்தன, ஒரு சில நுண்கற்கருவிகள் முக்கியத்துவம் பெற்று விளங்கின. இக்காலத்தில் உலோக தாதுக்களைத் தேடி மக்கள் நெடுந்தூரம் பயணம் செய்யவும் தொடங்கினர். இதனால் செம்பு கற்கால பண்பாடுகளுக்கிடையே தொடர்புகள் ஏற்பட்டன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் செம்பு கற்காலப் பண்பாடுகள் காணப்படுகின்றன-

பொதுவாக, ஆற்றங்கரைகளிலேயே செம்பு - கற்காலப் பண்பாடுகள் வளர்ச்சியடைந்தன. குறிப்பாக ஹாப்பா பண்பாடு செம்பு கற்காலப் பண்பாட்டின் ஒரு பகுதியேயாகும். தென்னிந்தியாவில் கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா, பெண்ணாறு- காவிரி ஆகிய நதிகளின் பள்ளத்தாக்குகளில் இக்காலத்தில் குடியானவ சமுதாயங்கள் தோன்றி வளர்ந்தன. உலோக காலத்தின் தொடக்கத்தில் இவர்கள் உலோகத்தைப் பயன்படுத்தவில்லை என்றாலும், கமார் கி.மு. 2000 ஆண்டுவாக்கில் செம்பும் வெண்கலமும் இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள பையம்பள்ளியில் வெண்கலம் மற்றும் செம்பு ஆகியவற்றாலான பொருட்கள், சுடுமண் உருவங்கள், மண்பாண்டங்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

KAMARAJ WOMENS COLLEGE

செம்பு - கற்காலத்தைத் தொடர்ந்து வந்த காலம் இரும்புக் காலமாகும். வேத இலக்கியங்களில் இரும்பு பற்றி அடிக்கடி குறிக்கப்படுகிறது. தென்னிந்தியாவில் இரும்புக் காலமும் பெருங்கல் காலமும் (மெகாலிதிக்) சமகாலம் எனக் கருதப்படுகிறது. மெகாலித்க் என்றால் பெரிய கல் என்று பொருள். கல்லறையின்மேல் சுற்றி அடுக்கப்பட்ட கற்கனள இது குறிக்கிறது, அத்தகைய கல்லறைகள் தென்னிந்தியாவில் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

கர்நாடகத்திலுள்ள ஹல்லூர், மாஸ்கி ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நாகார்ஜின கொண்டா, தமிழ்நாட்டில் ஆதிச்ச நல்லூர் ஆகிய இடங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. கல்லறைக் குழிகளில் கருப்பு சிகப்பு வண்ணத்தாலானப் பானையோடுகள், இரும்பாலான மண்வெட்டி மற்றும் அரிவாள், சிறு ஆயுதங்கள் போன்றவை காணப்படுகின்றன.

**தமிழர் நிலத்திணைகள்**

நிலத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பகுக்கப்பட்ட பாகுபாடு நிலத்திணை. தமிழ்நாட்டு நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வகை நிலத் திணைகளைக் கொண்டது. முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிமம் கொள்ளும்போது அது ஐந்தாக எண்ணப்பட்டது. இவையே தமிழர் நிலத்திணைகள்.

**ஐந்திணை**

குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்பனவே தமிழர் நிலத்திணைகள் ஆகும்.

- மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சித் திணை
- காடும், காடு சார்ந்த நிலமும் முல்லைத் திணை
- இவையிரண்டுக்கும் இடையில் அமைந்த பாழ் நிலம் பாலை எனப்பட்டது.
- வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் எனவும்,
- கடலும் கடல் சார்ந்த இடம் நெய்தல் எனவும் அழைக்கப்பட்டன.

இது வெறுமனே இயல்பியல் அடிப்படையிலான பகுப்புக்களாக இல்லாது, மக்கள் வாழ்வியலோடு இணைந்தவையாக அமைந்திருந்தன.

KAMARAJ WOMENS COLLEGE

## திணை

திணை என்பது ஒழுக்கம். அகத்திணை என்பது அகவொழுக்கம். புறத்திணை என்பது புறவொழுக்கம். தமிழில் உள்ள அகத்திணைப் பாடல்களுக்கு ஐந்திணைப் பாகுபாடு கொள்ளப்படுகிறது. இந்தப் பாகுபாடு ஐந்து வகைப்பட்ட திணை-ஒழுக்கங்களை மையமாக வைத்துக் கொள்ளப்படுகிறது. புணர்தல், தலைவன் புறவொழுக்கத்தில் பிரியும்போது தன்னை ஆற்றிக்கொண்டு இருத்தல், தலைவன் தன்னை விட்டு அகவொழுக்கத்தில் பிரியும்போது ஊடுதல், கடலில் சென்றவருக்காக இரங்கல், புறப்பொருளுக்காகப் பிரிதல் என்பன அகத்திணைக்கு அகத்திணை உரிப்பொருள்கள். இவற்றில் திணை மயக்கம் நிகழ்வது இல்லை. [3] எனவே மயங்காத உரிப்பொருளின் அடிப்படையில் இன்ன பாடல் இன்ன திணை எனக் கொள்ளப்படும். எனவே குறிஞ்சித் திணை என்பது 'புணர்தலும் புணர்தல் நிமித்தமும்' பற்றிய செய்திகளைக் கூறுவது என்பது பொருள். பிற திணைகளுக்கும் இவ்வாறே பொருள் கொள்ள வேண்டும். இது தமிழ் நெறி. காண்க; அகத்திணை - புறத்திணைஇ திணை விளக்கம்

## கற்பு

வரைவு எனப்படும் திருமணம் நிகழ்ந்த பிறகு, தலைமக்கள்மேற்கொள்ளும் இனிய இல்லற வாழ்க்கை கற்பு எனப்படும். அது இரு வகைப்படும்.

### களவு வழி வந்த கற்பு

தலைமக்கள் இருவரும் மறைமுகமான காதல் வாழ்வைச்சிலகாலம் மேற்கொண்டு, பின்னர் ‘வரைவு’ நிகழ - அதன் பின்அமையும் கற்பு வாழ்க்கை களவின் வழிவந்த கற்பு ஆகும்.

### களவின் வழிவராத கற்பு

தலைவன் - தலைவியருக்குத் திருமணத்துக்கு (வரைவுக்கு)முன்பு யாதொரு நட்பும், மறைமுகத் தொடர்பும் இன்றி, பெற்றோர்கூடி உடன்பட்டு அமைத்து வழங்கும் இல்லற வாழ்க்கை ‘களவின்வழி வாராக் கற்பு’ எனப்படும்.

### கற்பில் நிகழும் செயல்கள்

கற்பு வாழ்க்கையில் மகிழ்தல், ஊடுதல் (கோபப்படுதல்) ஊடல்உணர்த்தல் (கோபத்தை நீக்குதல்) இல்வாழ்க்கை நிகழ்த்துதல், தலைவன் தலைவியைப் பிரிதல் (பிரிவு) முதலான செயல்கள் நிகழும்.

KAMARAJ WOMENS COLLEGE

**ஊடலும் ஊடல் தணிக்கும் வாயில்களும்**

ஊடல் - ஊடுதல் - கோபம் கொள்ளுதல் களவு வாழ்க்கையில் தலைவியோடு மட்டுமே கூடி, அவளைஎன்றும் பிரியாமல் இருந்த தலைவன் - கற்பு வாழ்க்கை வாழும்காலத்தே 'பரத்தையர்' முதலான பிறவகைப் பெண்களோடுதொடர்பும் - மறைமுக உறவும் கொள்வான். இது பற்றி அறியவரும்போது தலைவி கோபம் கொள்வாள். அதுவே 'ஊடல்'எனப்படும். தலைவியின் ஊடலைப் போக்கி மீண்டும் கூடநினைப்பது தலைவனது இயல்பு, அதற்கு உறுதுணை புரிவோர் பலர். அவர்கள் 'ஊடல் தணிக்கும் வாயில்கள்' எனப்படுகின்றனர். பாணன், பாடினி, கூத்தர், இளையர் (வேலையாட்கள்), மற்றவர்கள், பாங்கன், பாங்கி, செவிலி, மூத்தோர் அல்லது சான்றோர், புதல்வன்முதலியவர்களோடு, விருந்து வருதல், பிரிவைப் பொறுத்திருக்க இயலாமை முதலான காரணங்களும் தலைவியின் ஊடலைப்போக்கவல்ல வாயில்களாகும்.

**மடலேறுதல்**

மடலேறுதலை மடல் மா ஏறுதல் என்றும் கூறுவர். மடல்-பனை மடல்; மா - குதிரை; பனைமடலால் செய்யப்பட்ட குதிரைமீது ஏறி, தலைவன் தன் காதலை உலகுக்கு வெளிப்படுத்துவதுஉண்டு; பாங்கி எனப்படும் தோழியின் உதவியுடன் தலைவியைக்கூடி மகிழ்வது தலைவனது இயல்பு. அவ்வகைக் களவுவாழ்க்கைக்கான வாய்ப்பு இல்லாத போதும் தோழி உடனிருந்துஉதவாதபோதும் தலைவன் இப் புதிய (மடலேறுதல்) முயற்சியைமேற்கொண்டு காதலில் வெற்றிபெற எண்ணுவான்.

தலைவன் நாணத்தை விட்டுவிட்டு, உடம்பெல்லாம் நீறுபூசி, மார்பில் எலும்பு மாலையையும் தலையில் எருக்கம் பூ மாலையையும்சூடிக்கொண்டு தலைவியின் வீட்டருகே நாற்சந்தியில் பனைஓலையால் செய்யப் பெற்ற பொய்க்குதிரையின் மேல் ஏறி நிற்பான். கையில் தலைவியின் பெயரும் ஊரும் பொறித்த ஓவியத்தைவைத்திருப்பான்.

மடலேறுதல் என்னும் செயலை மேற்கொள்வதாகத் தலைவன் சொன்னவுடன், தோழி அதைத் தடுத்து நிறுத்த முயல்வதும் உண்டு. இது 'மடல் விலக்கல்' எனப்படும்.

**சிறப்புச்செய்தி**

- 'மடல் ஏறுவேன்' என்று தலைவன் வாயளவில்சொல்லுதல் - ஐந்திணையில் சேரும். உண்மையாகவேமடலேறுதலை நிகழ்த்திவிட்டால் அது பெருந்திணைஆகி விடும்.

KAMARAJ WOMENS COLLEGE

- கடல் அளவு காமம் மிகுந்தாலும் பெண் (தலைவி) மடலேறும் வழக்கம் இல்லை.

**பிரிவு**

அகப்பொருள் இலக்கணத்தில் சிறப்பிடம் பெறும் செய்திஆகும். தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் என்பதே ‘பிரிவு’ என்ற பகுதியாகும்.

களவு, கற்பு என்னும் இருவகை வாழ்க்கையிலும் பல்வேறுகாரணங்களால் தலைவன் பிரிந்து செல்வதாக இலக்கணங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**களவில் பிரிவு**

தலைவன், தான் மேற்கொண்ட களவு என்னும் (மறைமுகக்)காதல் வாழ்வில் மேற்கொள்ளும் பிரிவுகள் இரண்டாகும். அவை

**ஒருவழித் தணத்தல்**

வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்ஒருவழித் தணத்தல் தணத்தல் ஸ்ரீ பிரிதல் ஒரே ஊரிலும், ஒரே நாட்டுக்குள்ளும் சில காலம் தலைவன்தலைவியைப் பிரிந்து இருப்பது ஒருவழித் தணத்தல் எனப்படும்

**வரைவிடைவைத்துப் பொருள் வயின் பிரிதல்**

‘வரைவு’ எனும் திருமணம் புரிந்து கொள்ளும் நோக்குடன், அதற்கான பொருள் தேடி, களவுக் காலத்தில் தலைவன்மேற்கொள்ளும் பிரிவு இது. இப்பிரிவுக்கு உரிய காலம் இரண்டுமாதங்கள் ஆகும்.

**கற்பில் பிரிவு**

களவில் இருந்து மாறிக் கற்பு வாழ்க்கை நிகழ்த்தும்போதும்தலைவன் பல காரணங்களுக்காகத் தலைவியைப் ‘பிரிதல்’ உண்டு. கற்பு வாழ்க்கையில் நிகழும் அத்தகைய பிரிவின் வகைகள்

**பரத்தையிற் பிரிவு**

- ஓதல் பிரிவு
- காவல் பிரிவு
- தூதுப் பிரிவு

KAMARAJ WOMENS COLLEGE

**துணைவயின் பிரிவு**

பொருள்வயின் பிரிவு (வயின் = தொடர்பாக / காரணமாக) இனி, இவற்றின் விளக்கங்களைக் காண்போம்.

**பரத்தையிற் பிரிவு**

தலைவியை மணந்து இல்லறம் மேற்கொள்ளும் கற்புவாழ்க்கையின் போதும் தலைவன் பிற மகளிரைப் புணர்வதற்காகப்பிரிதல் உண்டு. அவ்வகையில், 'பரத்தையர்' எனப்படும் பொதுமகளிருடன் தொடர்புடைய தலைவன், அதற்காகப் பிரிவது இவ்வகை. அயல்மனை (பக்கத்து மனை அல்லது வீடு), அயல்சேரி (அருகில்உள்ள வேறு ஒரு குடியிருப்பு), புறநகர் (நகரத்துக்குப் புறத்தேஅமைந்த பகுதி) எனும் மூன்று இடங்களில் தலைவன் செயல்பட, இப்பிரிவு நிகழும்.

**ஓதல் பிரிவு**

ஓதல் - ஓதுதல் - கற்றல்: கல்வி காரணமாகப் பிரிவது இவ்வகை. கல்வி வேதம் ஓதுதல், பிறவகைக் கல்வி எனஇருவகைப்படும்.

**காவல் பிரிவு**

'காவல்' புரிவதற்காக மேற்கொள்ளும் பிரிவு இது. இதுவும் இருவகைப்படும்.

**அறப்புறம் காவல்**

'கோவில்' முதலான அற நிலையங்களைப் பாதுகாப்பதற்காகத்தலைவன் மேற்கொள்ளும் பிரிவு. இது எல்லாவகை மாந்தர்க்கும்உரியது.

**நாடு காவல்**

ஒரு மன்னன் தன் நாட்டைப் பகைவன் கைப்பற்றாமல்காப்பதும், தன் நாட்டு மக்களை அல்லல் - இடையூறுகள் இன்றிக்காப்பதும் 'நாடு காவல்' எனப்படும்.

**தூதுப் பிரிவு**

பகை கொண்ட பிறநாட்டு மன்னனிடம் சென்று, பேசி, அவனதுபகையை மாற்றும் பணியை ஆற்றும் செயல் புரிதல் தூதுப்பிரிவுஆகும். இதற்குப் பகை தணிவினை என்றும் பெயர்.

**துணைவயின் பிரிவு**

அரசனுக்குத் துணையாகச் செல்வது, துணைவயின் பிரிவுஎனப்படும்.



KAMARAJ WOMENS COLLEGE

**பொருள்வயின் பிரிவு**

தலைவன் பொருளீட்டுதல் காரணமாகத் தலைவியைப் பிரிவது இவ்வகை.

**சிறப்புச் செய்திகள்**

- ஓதல் பிரிவு-3 ஆண்டுகள்; தூது, துணை, பொருள் பிரிவு 1 ஆண்டு எனக் கால வரையறை உண்டு. ஓதல் பிரிவு மேற்கொண்ட தலைவன், இடையில் திரும்பிவருதல் கூடாது.
- 'கலம்' எனப்படும் கப்பலில் செல்லுதல் மகளிர்க்கும், அந்தணர்க்கும் கூடாது.
- எல்லா வகைப் பிரிவையும் தலைவன் தலைவியிடம் சொல்லிச்செல்வதும் உண்டு; சொல்லாமல் செல்வதும் உண்டு; எனினும் குறிப்பாகவோ, தோழியிடமோ கூறிச் செல்வான்.

**இலக்கியத்தில் உணவு**

பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளைக் கூறும் நூல் 'மடைநூல்' என அழைக்கப்படுகிறது. அதனைப் பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல்களில் கூறப்படுகின்றன. காலத்திற்கும், நிலத்துக்கும் ஏற்ற உணவுகளை அந்நூல்களில் அறிந்து கொள்ளலாம். சீவக சிந்தாமணியில் முத்தியிலம்பகத்தில் இருது நுகர்வு என்னும் பகுதியில் சில பெரும்பொழுதிற்குரிய உணவு வகைகள் கூறப்பட்டுள்ளன

**சங்ககால தமிழர் உணவு சிறு தானிய வகைகள்**

"உணவெனப்படுவது நிலத்தோடு நீரே" என்ற தெளிவு கொண்ட தமிழ்ச்சமூகத்தில் பல்வேறு பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான தானியங்கள் விளைவிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் உணவின் வகைகள் விரிந்து அந்தந்த நில மக்கள் விளைவிக்கும் உணவுப் பொருட்கள் அவர்களின் உணவானது. அறுசுவையோடு மருத்துவ குணம் கொண்ட பொருட்களை கொண்டு சமைக்கப்பட்ட உணவு முறை தமிழரின் அடையாளமாக மாறியது.

**பழந்தமிழரின் உணவு உட்கொள்ளும் 12 வகைகள்**

- அருந்துதல் - மிகச் சிறிய அளவே உட்கொள்ளல்.
- உண்ணல் - பசிதீர உட்கொள்ளல்.
- உறிஞ்சல் - வாயைக் குவித்துக்கொண்டு நீரியற் பண்டத்தை ஈர்த்து உட்கொள்ளல்.

KAMARAJ WOMENS COLLEGE

- குடித்தல் - நீரியல் உணவை (கஞ்சி போன்றவை) சிறிது சிறிதாக பசி நீங்க உட்கொள்ளல்.
- தின்றல் - தின்பண்டங்களை உட்கொள்ளல்.
- துய்த்தல் - சுவைத்து மகிழ்ந்து உட்கொள்ளுதல்.
- நக்கல் - நாக்கினால் துழாவி உட்கொள்ளுதல்.
- நுங்கல் - முழுவதையும் ஒரு வாயில் ஈர்த்து உறிஞ்சி உட்கொள்ளுதல்.
- பருகல் - நீரியற் பண்டத்தை சிறுகக் குடிப்பது.
- மாந்தல் - பெருவேட்கையுடன் மடமடவென்று உட்கொள்ளுதல்.
- மெல்லல் - கடிய பண்டத்தைப் பல்லால் கடித்துத் துகைத்து உட்கொள்ளுதல்.
- விழுங்கல் – பல்லுக்கும், நாக்குக்கும் இடையே தொண்டை வழி உட்கொள்

**கடலுணவு**

தமிழ் நாடும் தமிழீழமும் நீண்ட கடற்கரையை கொண்டுள்ளமையால், தமிழர்கள் உணவில் கடலுணவு முக்கியபங்கு வகிக்கின்றது. மீன், இறால், நண்டு, கணவாய், மட்டு ஆகியவை தமிழர்களால் விரும்பி உண்ணப்படுகின்றன.

**இறைச்சி**

தமிழர்கள் கோழி, ஆடு, மாடு, பன்றி, முயல், உடும்பு, மான், காடை, மீன் போன்ற உணவுகளை உண்ணும் வழக்கம் உடையவர்கள். கோயில்களில் விலங்குகளை (ஆடு, கோழி) காவு கொடுத்து அவ்விறைச்சியை பங்கு போட்டு உண்ணும் வழக்கம் சில கிராமங்களில் உண்டு. மாடு உண்பதை இந்து சமயத்தை பின்பற்றும் பிராமணத் தமிழர்கள் பெரும்பாலும் தவிர்க்கின்றார்கள்; ஆனால், புலம் பெயர்ந்த நாடுகளில் இந்து சமயத்தைப் பின்பற்றும் சில தமிழர்களால் மாடும் உண்ணப்படுகின்றது.

**மரக்கறி உணவு**

தமிழர் சமையலில் மரக்கறி உணவு சிறப்பிடம் பெறுகின்றது. பெரும்பாலான தமிழர்கள் சைவ சமயத்தைப் பின்பற்றுவதால், அச்சமயத்தில் மரக்கறி உணவு பரிந்துரைக்கப்படுவதால் மரக்கறி உணவு தமிழர் சமையலில் ஒரு நீண்ட வரலாற்றையும் விரிவடைந்த ஒரு பங்கையும் வகிக்கின்றது

KAMARAJ WOMENS COLLEGE

**அணிகலன்கள்**

பண்டைய காலத்து தமிழர்கள் வீரத்திற்கு மட்டும் பெயர் போனவர்கள் கிடையாது. விதவிதமான தங்க அணிகலன்களை அணிவதிலும் சிறந்து விளங்கினர்.

**தமிழர்களின் அணிகலன்களை**

- தலையணிகள்,
- செவியணிகள்,
- கழுத்தணிகள்,
- மார்பணிகள்,
- கையணிகள்,
- இடையணிகள்,
- காலில் அணியும் அணிகலன்கள்

என்று பிரிக்கலாம்.

தலையணிகளில் தொய்யகம், பூரப்பாளை, புல்லகம் ஆகியவை உள்ளது. தொய்யகம் என்றால் நெத்திச் சுட்டியாகும். நெற்றியில் சுட்டிக்காட்டுவது போல அமைந்ததால் நெத்திச்சுட்டி என்று பெயர் பெற்றது. ஆனால் பழங்காலத்தில் இதற்கு பெயர் தொய்யகம். பூரப்பாளை என்பது நெத்திச்சுட்டியின் இரண்டு பக்கத்திலும் மாலை போல செயின் வருவதைக் காணலாம். அதற்கு பெயரே பூரப்பாளையாகும். புல்லகம் என்றால் சூரிய பிரபை, சந்திர பிரபையாகும். தலை வகுடு எடுத்த பின்பு இருபுறமும் பொருத்தக்கூடியது. இது சூரிய வடிவில் இருந்தால் சூரிய பிரபை, சந்திர வடிவில் இருந்தால் சந்திர பிரபையாகும்.

காது வளர்க்கும் பழக்கம் தமிழர்களிடம் அதிகமாக இருந்தது. இப்படி காதை வளர்த்த பிறகு அந்த ஓட்டையில் பனையோலையை சுருட்டி வைத்ததாக ஒரு மரபை சொல்வார்கள். குதம்பை, குழை இரண்டுமே காதை ஒட்டி போடக்கூடியதாகும். குண்டலம் என்றால் தற்போதைய ஜிமிக்கி கம்மல்தான். இதில் மகர குண்டலம், வியாழ குண்டலம் என்று நிறைய வகை உண்டு.

பண்டைய காலம் முதலே தனி மனிதர்கள் பொன், வெள்ளி முதலியவற்றால் ஆன ஆபரணங்களை அணிந்து தம்மை அலங்கரித்து கொண்டனர். அவற்றை அணிவதை பெருமைக்குரியதாகவும், மதிப்புக்குரியதாகவும் கருதி கொண்டனர்.

KAMARAJ WOMENS COLLEGE

பொதுவாக தமிழ் இலக்கியங்கள் பெண்களை பற்றி பேசும் போது அவர்கள் அணிந்திருந்த அணிகலன்களோடு தொடர்பு படுத்தியே மாணிழை மகளிர், வாலிழை மகளிர் என அடைமொழிகளுடன் குறிப்பிட்டுள்ளனர். மகளிரை பற்றிய அடை மொழிகள், அவர்கள் அணிந்த அணிகலன்களின் சிறப்பை குறிப்பதாக இருக்கும். சமூக மாற்றம் நிகழ அனைவரும் காது, கழுத்தில் அணிகலன்கள் அணிய துவங்கினர்.

அழகி ஒருத்தி அணிகலன் பல அணிந்து மணலில் உலவிய செய்தியை புறநானூறு கூறுகிறது. பொன்னாற் செய்த வளைந்த ஆபரணங்கள் அணிந்த மகளிர் உயர்ந்த மாடங்களில் வாழ்ந்ததையும், அம்மகளிர் பல்வகை மணிகள் கோர்த்த வடங்கள், கால்களில் பொன்னால் செய்த பூண்களுடன் பொற்சிலம்பு, கைகளில் பொன் வளையல்கள், காதில் பொன்னால் ஆன தோடு அணிந்து வலம் வந்துள்ளனர். பெண் என்றாலே அழகுதான். ஆனாலும் அழகுக்கு அழகு சேர்க்க காது, கழுத்து, கால்களில் அணிகலன்கள் அணிந்தனர். ஆதி காலத்தில் இருந்தே அணிகலன்கள் மீது பெண்களுக்கு ஆசை அதிகம். ஆதி காலத்தில் மண்ணினால் செய்யப்பட்ட அணிகலன்களையும், பின் சங்கு, சிப்பி, சோவி, செம்பு, வெள்ளி, தங்கம் என வித விதமாக அணிந்து பெண்கள் மகிழ்ந்தனர். பண்டைய காலத்தில் பெண்கள் கொப்பு, எதிர்தவடு, குறுக்கு தட்டு, லோலாக்கு, தோடு, தண்டட்டி, மொன்னப்ப தட்டு, பாம்படம், சவுடி கங்கனம், வாகுவளையம், தோள்வளையம், கழுத்து ஆரம், ஒட்டியாணம், மேகலை, கொலுசு, சூரிய சத்திர பறை என பல அணிகலன்கள் அணிந்துள்ளனர்.

**பண்டைத் தமிழர் சமுதாயத்தில் வணிகர்**

மக்கள் வாழ்க்கைக்கு உணவு, உடை போன்றே பொன், வெள்ளி முதலிய செல்வமும் இன்றியமையாதவையாகும். ஒரு நாட்டின் நல்வாழ்விற்கு, பொருள் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவன உழவுத்தொழில், கைத்தொழில்கள், நில வழியும் நீர் வழியும் நடத்தப்பெறும் வணிகம் ஆகியன என்று பண்டைத் தமிழர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர்; ஆகையால்தான், நம் முன்னோர் தம் மக்களைத் திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்றனர். பண்டைத் தமிழர் சமுதாயத்தில் வணிகர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தது எனவும் சங்ககால வாணிகம் தமிழர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தது எனவும், வணிகம் ஐவகை நிலங்களில் வெவ்வேறு தொழில்கள் நடைபெற்றதால் வாணிகமும் வேறுபட்டு இருப்பதைக் காண முடிகிறது எனக் கூறியுள்ளார். வணிகர்களால் தமிழகம் செல்வச் செழிப்புற்று விளங்கியது எனவும், இவர்கள் சான்றோர்கள் கூறியுள்ள அறநெறிகளிலிருந்து தவறாது, இல்லற நெறியிலும் பிறழாது வாழ்ந்தனர். வெளிநாட்டினரோடு சிறப்பாக வாணிகம் செய்தனர் என விளக்கியுள்ளார்.

KAMARAJ WOMENS COLLEGE

**கடல் வாணிகம்**

அந்தக் காலத்துப் பழந்தமிழர், பாரத தேசத்தின் வடக்கே கங்கைக்கரை (பாடலிபுரம்) முதலாகக் கிழக்குக்கரை மேற்குக்கரை நாடுகளில் நடத்திய வாணிகத்தைப் பற்றியும் தமிழகத்துக்கப்பால் கிழக்கே இலங்கை, சாவக நாடு (கிழக் கிந்தியத் தீவுகள்), மலேயா, பர்மா முதலான கடல் கடந்த நாடுகளோடு செய்த வாணிகத்தைப் பற்றியும், மேற்கே அரபுநாடு, அலக்சாந்திரியம் (எகிப்து), உரோம் சாம்ராச்சியம் (யவன தேசம்) ஆகிய நாடுகளுடனும் செய்த வாணி கத்தைப் பற்றியும் கூறுகிறது. அந்தப் பழங்காலத்து வாணிகச் செய்திகளைச் சங்ககாலத்து நூல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது. மற்றும் தாலமி, பிளைனி முதலான யவன ஆசிரியர் எழுதின குறிப்புகளிலிருந்தும் 'செங்கடல் வாணிகம்' என்னும் நூலிலிருந்தும், புதைபொருள் ஆய்வுகளிலிருந்தும் கிடைத்த செய்திகளிலிருந்தும் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டும் எழுதப்பட்டது.

அக்காலத்து இடம், பொருள், ஏவல்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் தக்கபடித் தரை வாணிகத்தையும் கடல் வாணிகத்தையும் நடத்தினார்கள். அவர்கள் கூட்டாகச் சேர்ந்து 'சாத்து' அமைத்துப் பெரிய வாணிகத்தை நடத்தினார்கள். தரை வாணிகஞ் செய்த வாணிகத் தலைவர் மாசாத்துவர் என்று பெயர் பெற்றனர். கடல் வாணிகத் தலைவர் மாநாய்கர் (மாநாவிகர்) என்று பெயர் கூறப்பட்டனர். அக்காலத் தமிழகத்திலே பல மாசாத்துவர்களும் பல மாநாய்கர்களும் இருந்தார்கள்.

**சுங்கவரி**

உல்கு என்பது சுங்கவரி. புகார்த் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கு உல்குவரி வாங்கப்பட்டது. உல்குவரி பெறப்பட்டதற்கான முத்திரையும் பொருளின்மீது இடப்பட்டது. இப்படி முத்திரையிட்டு மாளாத அளவுக்குப் பொருள்கள் குவிந்து கிடந்தன. இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் தெருக்களில் குவிந்துகிடந்தன. வெண்ணிற மடல்களை உடைய தாழைமரங்கள் மண்டிக்கிடந்த தெருக்கள் அவை. அப்பொருள்களில் அரசனுக்குச் சொந்தமான பொருள்களை ‘இறைவன் தொழில் மாக்கள்’ காவல் புரிந்தனர். வேலேற்றிய வண்டி அப் பொருள்களைக் காக்கும் இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தது. சூரியனாம் தேரை இழுத்துச் செல்லும் குதிரை போல நாள்தோறும் பகல் முழுவதும்’உல்கு’ செய்யப்பட்டது. உல்கு செய்யச் செய்ய உல்கு செய்யப்படாத பொருள்களின் இருப்பு குறையவே இல்லை.

KAMARAJ WOMENS COLLEGE

**நீரினின்று நிலத்தேற்றவும்**

**நிலத்தின்று நீர்ப்பரப்பவும்**

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி - கடலிலிருந்து மேகம் முகந்து சென்ற நீர் மலையில் பொழிவது போல நீரிலிருந்து பொருள்கள் நிலத்தில் ஏற்றப்பட்டன. மலையில் பொழிந்த நீர் கடலுக்கு வந்து பரவுவது போல நிலத்திலிருந்து பொருள்கள் நீரிலுள்ள நாவாயில் பரப்பப் பட்டன. அந்தப் பண்டங்கள் அளந்தறிய முடியாதபடி பற்பலவாகக் குவிந்துகொண்டிருந்தன.

**புலிபொறித்துப் புறம்போக்கி**

**மதிநிறைந்த மலிபண்டம்**

புலி முத்திரை - ஏற்றுமதிக்காகவும், இறக்குமதியிலிருந்தும் வந்த மதிப்பு மிக்க பொருள்களின்மீது புலிச் சின்னம் பொறிக்கப்பட்டது.

**விளையாட்டு**

விளையாட்டு (Game) என்பது பொழுதுபோக்குக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், சில வேளைகளில் கற்பித்தல் நோக்கத்துக்காகவும் நடத்தப்படும் கட்டமைப்புக் கொண்ட ஒரு செயற்பாடு ஆகும். விளையாட்டு சில சமயங்களில் வேலை, என்பதுடன் தொடர்புடையது போல் காணப்படுகிறது. ஆனால், வேலை ஊதியத்துக்காகச் செய்யப்படுவது. விளையாட்டு ஒரு கலை என்றும் குறிப்பிடப்படுவது உண்டு. ஆனால் கலையைப்போல் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒன்றாக விளையாட்டு இருப்பதில்லை. இருந்தாலும், எப்போதும் இவற்றுக்கு இடையேயான எல்லைகள் தெளிவாக இருப்பதில்லை. தொழில் முறை விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு வருமானத்துக்கான ஒரு தொழிலாகவே உள்ளது.

"ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா. கூடி விளையாடு பாப்பா" என்பது பாரதியின் கூற்று. விளையாட்டு அனைத்து மனிதர்களும் இயல்பாக விரும்பி ஈடுபடும் செயற்பாடுகளில் ஒன்று. தொல்காப்பியம் உரியியல் (தொல் 319) என்ற பகுதியில் கெடவரல், பண்ணை எனும் இரு சொற்களால் விளையாட்டைக் குறிக்கின்றது. இத்தொல்காப்பியக் குறிப்பு அக்காலத்தே விளையாட்டுகள் மக்களிடத்தே செல்வாக்குப் பெற்றிருந்தமையை உணர்த்துகின்றது. கெடவரல் என்பது நிலத்தில் விளையாடும் விளையாட்டையும் பண்ணை என்பது நீரில் விளையாடப்படும் விளையாட்டையும் குறிக்கும் என்பர்.

KAMARAJ WOMENS COLLEGE

சங்க இலக்கியத்தில் விளையாட்டு என்பது பெரும்பாலும் நிலத்தில் ஆடப்படுகின்ற விளையாட்டுகளைக் குறித்தது. ஆடுதல் என்ற சொல் நீரோடு இணைந்த விளையாட்டுகளையே பெரிதும் குறித்தது.

**சங்கத் தமிழரின் விளையாட்டுக் கொள்கைகள்:**

சங்கத் தமிழர் பெரிதும் சமூகம் சார்ந்த செயற்பாடாகவே விளையாட்டைக் கருதினர். குழுநிலை விளையாட்டுகளும், மைதானங்களின் நடுவே இடம்பெற்ற வீர விளையாட்டுகளும் சமூகச் செயற்பாடுகளாகவே திகழ்ந்தன. அரசுகள், ஊர் மன்றங்கள், பெரு விளையாட்டுகளை நடத்தி வென்றோருக்கு மதிப்பளித்தன. சமூக அங்கத்தவர் எல்லோரும் தத்தம் வயது, பால் என்பவற்றிற்கேற்பப் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டனர். பெண்களை 'வீட்டுக்குள் வளர்த்தல்' (இச்செறித்தல்) என்னும் நிலை அக்காலத்தில் காணப்பட்டாலும் சிறுமியர், இளம் மகளிர் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆண்களைப் போலவே பெண்களும் பல விளையாட்டுகளில் ஈடுபட்டுள்ளனர். 'சிறுமியர் வெளியிற் சென்று தம் தோழியரோடு விளையாடுவதே அறம். அவ்வாறு விளையாடுவதால் உடலும் உள்ளமும் ஆக்கம் பெறும். மாறாக வீட்டுக்குள் இருந்தால் அது அறமும் இல்லை, ஆக்கமும் தேய்ந்து விடும்' என்ற செய்தி நற்றிணை என்னும் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது.

**"விளையா டாயமொடு ஓரை யாடாது**

**இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்**

**அறனும் அன்றே ஆக்கமுந் தேய்ம்மெனக்....." (நற்றிணை 68)**

வெற்றியையும் தோல்வியையும் ஒத்த உணர்வோடு நோக்கும் பாங்கு சங்க இலக்கியங்களில் உணரப்பபடுகின்றது.

**தமிழ் வளர்த்த சங்கம்**

பண்டைய தமிழகத்தில் தமிழ்ப் புலவர்கள் கூடித் தலை, இடை, கடை என மூன்று சங்கங்கள் கூட்டி அவற்றில் அமர்ந்து தமிழ் வளர்த்தார்கள் கடைச்சங்க காலத்தில்எழுந்தவையே எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்கள் எனக் கொள்ளுவதும் தமிழகத்தில் வழக்கமாய் இருந்து வருகின்றது. பொதுவாகச் சங்கம் என்னும்

சொல்லானது கடைச் சங்கத்தையே குறித்து நிற்கும். இதற்கு நேரான தமிழ்ச் சொற்கள் உண்டு, கூடல், அவை, மன்றம் ஆகியவை சங்கத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களாம். தமிழ்ச் சங்கம்அல்லது கூடல் வளர்ந்த இடமாகிய மதுரையானது கூடல் என்னும் பெயராலும் வழங்கி வருகின்றது. இஃது இடவாகு பெயர். தமிழ



KAMARAJ WOMENS COLLEGE

வளர்ந்தகூடலைத் 'தமிழ் கெழுகூடல்' என்று புறப்பாட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. சங்கம் என்னும் பெயர் ஏற்படுவதற்கு முன்பு கூடல் என்னும் சொல்லே வழங்கியிருக்க வேண்டும். சமணரும் பௌத்தரும் தத்தம் சமயங்களை வளர்ப்பதற்காகச் சங்கங்கள் நிறுவினார்கள். மதுரையில் நடைபெற்று வந்தகூடலை முதன்முதல் அவர்களே சங்கம் என்று பெயரிட்டழைத்திருக்கக்கூடும். வைதிக ஆரியரும், சமணரும், பௌத்தரும் தமிழகத்தில் நுழைந்த பிறகுஏற்பட்ட ஆயிரக்கணக்கான பெயர் மாற்றங்களுள் இஃதும் ஒன்றாகஇருக்கவேண்டும்.

சங்க இலக்கியம் ஒன்றிலேனும் 'சங்கம்' என்னும் சொல் காணப்படவில்லை என்பது உண்மையே. இதற்குத் தக்கதொரு காரணமும் உண்டு. இக்காலத்தில் நூல் இயற்றும் ஆசிரியர் ஒருவர் 'நான் இந்நூலை, இன்னஇடத்தில், இன்ன பல்கலைக்கழகம் நிகழும்பொழுது ஆக்கினேன்' என்றுகூறித் தம்மை அறிமுகப்படுத்திக்கொள்ளும் மரபு இல்லை. இச் செய்திகளை நாம் அறிய வேண்டுமாயின் நூல் அச்சிடப்பட்ட ஊர், காலம் இவற்றைக்காட்டும் ஏட்டைத் திருப்பிப் பார்க்கவேண்டும். பண்டைய புலவர்களும் இம்முறையைப் பின்பற்றி வந்தனர். தனிப்பாடலாசிரியரோ, நூலாசிரியரோ, தொகுப்பாசிரியரோ இன்ன ஊரில், இன்ன காலத்தில்தாம் தம் பாட்டையோ, நூலையோ, தொகுப்பையோ படைத்ததாகக் குறிப்பிடும் வழக்கத்தை மேற்கொண்டிலர். இக் காரணத்தினாலேயே சங்கம், கூடல், மன்றம் எனசொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. அன்றி, இப்பெயர்கள்

**சங்க கால ஆட்சி முறை**

சங்க காலத்தில் நற்குணங்கள் நிறைந்த மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். ஒரு சிலர் கொடுங்கோலாட்சியும் செய்து வந்தனர். மன்னர்கள் மக்களின் நல்வாழ்விற்காக அரும்பாடுபட்டனர் என்பதும் புரிகிறது. ஒற்றர்கள் வாயிலாக மக்கள் நிலையை மன்னர்கள் அறிந்து அதற்கு ஏற்றவாறு பணியாற்றி வந்தனர். சங்க காலத்தில் ஊராட்சி, நகராட்சி என்ற அமைப்புகள் இருந்தன.

**ஊராட்சி**

ஊராட்சி பற்றித் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. சோழப் பேரரசு காலத்தில் ஊராட்சி ஓங்கி வளர்ந்து இருந்தது. ஊர்களில் சிற்றூர்இ பேரூர்இ மூதூர் எனப் பலவகை ஊர்கள் இருந்தன. இவ்வூர்களில் ஆட்சி எவ்வாறு நடைபெற்று வந்தது என்பதைக் காண்போம்.

ஊரின் நடுவில் மக்கள் கூடிப் பேசுவது வழக்கமாக இருந்து வந்தது. இவ்வாறு கூடின கூட்டத்திற்கு மன்றம், பொதியில், அம்பலம், அவை என்னும் பெயர்கள் இருந்ததாகப் பழங்காலத்து இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. மன்றம் என்பது ஊர் நடுவிலுள்ள மக்கள் கூடிய இடம் எனவும், அம்பலம், பொதியில்

KAMARAJ WOMENS COLLEGE

என்னும் இரண்டும் சிறுமாளிகையைக் குறிப்பிடுகின்றன என்றும் அதன் நடுவில் ஒரு பீடம் இருந்ததாகவும் கருதுகின்றனர். பொதியில் சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது எனப் பட்டினப்பாலை கூறுகிறது.

**அந்தி மாட்டிய நந்தா விளக்கின்**

**மலர் அணி மெழுக்கம் ஏறிப் பலர் தொழ**

**வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்**

**(பட்டினப்பாலை: 247-249)**

(அந்தி-இருள் சூழும் மாலை நேரம்; மாட்டிய- கொளுத்திய; நந்தா விளக்கு-அணையாத விளக்கு; வம்பலர்-புதியவர்கள்; கந்து-தூண்). சில ஊர்களில் பெரிய மரத்தடியில் மன்றம் கூடியது. குறிப்பாக, வேப்ப மரத்தடியில் இது அமைந்திருந்தது எனப் புறநானூற்றுப் பாடல்கள் மூலம் அறிகிறோம்.

**மன்ற வேம்பின் ஒண் பூ உறைப்ப**

**(புறநானூறு, 371:7)**

இம்மன்றத்தில் முதியோர்கள் கூடினர். அக்கூட்டத்தில் மக்களிடையே நிகழ்ந்த வழக்குகளைத் தீர்க்கும் பணி நடைபெற்று வந்தது. சில சமயங்களில் ஊர்ப் பொதுக்காரியங்களையும், சமூக நலத் திட்டங்களையும் மன்றத்தார் பொறுப்பேற்று நடத்தி வந்தனர்.

**நகராட்சி**

சங்க காலத் தமிழகத்தில் சில நகரங்கள் இருந்தன. ஊர்களில் சிற்றூர், பேரூர், மூதூர் என இருந்தமை போல் நகரங்களில் பட்டினம், பாக்கம் எனச் சில இருந்தன. இவற்றில் பட்டினம் என்பது கடலோரத்தில் இருந்த நகரத்தைக் குறித்தது. பாக்கம் என்பது பட்டினத்தின் ஒரு பகுதியானது எனலாம். சங்க காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த நகரங்களுள் சிறந்தவை புகார் (காவிரிப்பூம்பட்டினம்) கொற்கை, மதுரை, வஞ்சி அல்லது கரூர், முசிறி, காஞ்சி முதலியவை. நகரங்கள் வணிகத்தினாலும், தொழில் சிறப்பினாலும் வளமுற்றிருந்தன. குறிப்பாக, மதுரையும் காவிரிப்பூம்பட்டினமும் சிறப்புற்று வளர்ந்திருந்தன. இரவு நேரங்களில் நகரங்கள் பாதுகாக்கப்பட்டன. ஊர்க்காவலர் என்பவர்கள் பாதுகாவலுக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

KAMARAJ WOMENS COLLEGE

**வருவாய்**

நிதியின்றி நிருவாகத்தை நடத்த முடியாது. ஆதலால் நாட்டிற்கான வருமானம் பல வழிகளில் திரட்டப்பட்டது. நிலவரி அரசின் முக்கிய வருவாய் ஆகும். விளைச்சலில் ஆறில் ஒரு பாகம் அரசுக்கு வரியாக வசூலிக்கப்பட்டது. இவ்வருவாய்களுடன் சிற்றரசர்கள் செலுத்திய திறையும் அரசாங்கத்தின் வருவாயில் முக்கிய இடம் வகித்தது. மன்னன் போர் புரிந்து ஒரு நாட்டை வென்றால் பெரும்பாலும் அந்நாட்டிலிருந்து செல்வங்களைக் கைப்பற்றுவது வழக்கம். இதுபோன்று கைப்பற்றப்பட்ட செல்வங்களும் அரசிற்கு வருவாய் ஆகும். குற்றம் புரிந்தோரிடமிருந்து அபராதம் வசூலிக்கப்பட்டது. பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும்போது வரி வசூலிக்கப்பட்டது. இது போன்ற வரிகளை மக்கள் பொருளாகவோ அல்லது பணமாகவோ அரசுக்குச் செலுத்தலாம்.

வரி வசூலிப்பதற்கு என்று தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். வாரியத்தில் வரி வசூலித்த அதிகாரி வாரியர் என்று அழைக்கப்பட்டார். வரி பற்றிய கணக்குகளைப் பராமரித்தவர் ஆயக் கணக்கர் எனப்பட்டார். வரிவசூலிப்பது போல் வரிவிலக்கும் சங்க கால அரசியலில் இருந்ததாகத் தெரிகிறது. கோயில் கட்டுதல், நீர்ப்பாசனத்திற்காகக் கால்வாய்கள் மற்றும் குளங்கள் வெட்டுதல், பிற பொதுப்பணிகள் வழங்குதல் போன்ற செலவுகளுக்கு அரசின் வருவாயிலிருந்து செலவு செய்தனர்.

**நாணயங்கள்**

அரசாங்கத்தால் நாணயங்கள் அச்சிடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. நாணயங்கள் தயாரிப்பதற்கு என்று பொற்கொல்லர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு அரசரும் ஒரு அடையாளத்தை அவர்கள் நாட்டு நாணயத்தில் பொறித்துக் கொண்டனர். இதற்குச் சான்றாகச் சேர நாட்டு நாணயத்தில் வில்லும்இ சோழ நாட்டு நாணயத்தில் புலியும், பாண்டிய நாட்டு நாணயத்தில் மீனும் பொறிக்கப்பட்டிருந்தன. பொன் என்பது தங்க நாணயமாகும். தாமரை மொட்டுப் போன்ற நாணயம் காசு என்று கூறப்பட்டது.

**பண்டைய தமிழரின் அயலகத் தொடர்புகள்**

பண்டைய தமிழர் வாழ்விற்கு இன்றியமையாதது பொருள் என்று கருதினர். உயிர் வாழ்வதற்குத் தேவையான கூறுகளாக உள்நாட்டுப் பொருள்களையும், அயல்நாட்டுப் பொருள்களையும் கருதலாயினர். அத்தகைய பொருள்களைப் பெறச் சோம்பல் இல்லாமல் கடுமையாக உழைத்து வளம் சேர்த்தனர். இம்முயற்சியின் ஒரு கூறாக,

KAMARAJ WOMENS COLLEGE

**"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" (கொன்றை வேந்தன்,39)**

என்ற முதுமொழிக்கு ஏற்பக் கடல் கடந்த நாடுகளுடன் வாணிபம் செய்து பொருள் ஈட்டினர். பழந்தமிழர்கள் மலைகளுடனும், காடுகளுடனும், கடலுடனும் கலந்து உறவாடினார்கள். இவர்கள் பண்டைக் காலத்திலேயே அயல்நாடுகள் பலவற்றுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். இதற்கான சான்றுகளை அயல்நாட்டுக் குறிப்புகளைக் கொண்டும்இ நம்முடைய பழைய இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம்.

**அயல்நாட்டுக் குறிப்புகள்**

பழந்தமிழர்கள் மேற்கே கிரீஸ் (கிரேக்கம்), ரோமாபுரி, எகிப்து முதல் கிழக்கே சீனா வரையில் கடலோடிப் பிழைத்தார்கள். இந்நாடுகள் மட்டுமின்றிப் பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா போன்ற மேலை நாடுகளுடனும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தார்கள். மேலும் வடஇந்திய நாடுகளுடனும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தார்கள். தமிழகத்துப் பண்டங்களான ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு ஆகியவற்றிற்கு மேற்கு ஆசிய நாடுகளில் மிகுந்த தேவை ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்ட பழந்தமிழர்கள் இவை போன்ற பொருள்களை அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

**இலவங்கம்**

யூதர்களின் ஆதி சமயத் தலைவர் மோசஸ் (Moses) என்பவர், தாம் நிகழ்த்தி வந்த இறைவழிபாட்டில் ஏலக்காயைப் பயன்படுத்தினார் என்று பழைய ஏற்பாடு (Old Testament) கூறுகிறது. மோசஸ் கோயில் கட்டி வழிபாடு செய்தது கி.மு. 1490இல் என்பர். தென் அரேபியா நாட்டு அரசி ஷேபா (Sheba), இஸ்ரேல் நாட்டின் மன்னன் சாலமன் (Solomon) என்பவனைக் காணச் சென்றபோது, அவனுக்குப் பரிசுப்பொருள்களாக ஏலக்காய், இலவங்கம் போன்ற நறுமணப் பண்டங்களைக் கொண்டு போனதாகப் பழைய ஏற்பாட்டில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. சாலமன் ஆண்ட காலம் கி.மு.1000 என்பர். சாலமனுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சேரநாட்டுத் துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் மயில் தோகை, அகில் மரங்கள், யானைத் தந்தம், குரங்குகள், வெள்ளி போன்ற பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன என்ற குறிப்பும் அறியப்படுகிறது. மேலே குறிப்பிட்ட சான்றுகளால் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பழந்தமிழர் மேலை நாட்டாரோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

**பழந்தமிழ் இலக்கியக் குறிப்புகள்**

கிரேக்கம், ரோமாபுரி ஆகிய நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்த வாணிகர், தொழிலாளர் முதலானோரை யவனர் என்று பழந்தமிழ் இலக்கியங்கள்

KAMARAJ WOMENS COLLEGE

குறிப்பிடுகின்றன. கிரேக்கர்கள் தங்கள் நாட்டையும், மொழியையும் அயோனெஸ் (Iaones) என்று கூறிக் கொள்வராம். அதுவே தமிழில் யவனர் எனத் திரிந்தது என்பர். ஆனால் அச்சொல் கிரேக்கர்களையும், ரோமர்களையும் ஒரு சேரக் குறிப்பதாக வழங்குகிறது. யவனர்களோடு வாணிபம் செய்த தமிழர்கள் அவர்களுடைய நாடுகளிலிருந்து தங்கத்தையும், மதுவையும் இறக்குமதி செய்தனர். தங்கத்தின் விலைப்பொருட்டாக மிளகினை ஏற்றுமதி செய்தனர். யவனர்கள் வாணிகர்களாக மட்டுமன்றிஇ தமிழக மன்னர்களின் அரண்மனையில் கைவினைக் கம்மியராகவும் (கம்மியர்- உலோக வேலை செய்பவர்), காவல்காரராகவும் பணிபுரிந்துள்ளனர். தமிழகத்தில் உள்ள பெரிய துறைமுகப்பட்டினங்களில் யவனர்களுக்குத் தனி இருப்பிடங்கள் இருந்தன. இவை போன்ற குறிப்புகள் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றன.

**பொன்னொடு வந்து மிளகொடு மீளுதல்**

முசிறி என்னும் சேரநாட்டுத் துறைமுகப்பட்டினத்தில், யவனர்களின் மரக்கலங்கள் பொன்னைக் கொண்டுவந்து கொட்டிவிட்டு, அதற்கு விலையாக மிளகு மூட்டைகளை ஏற்றிச் செல்வதாக அகநானூறு குறிப்பிடுகிறது.

**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**

**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**

**வளங்கெழு முசிறி**

**(அகநானூறுஇ 149:9-11)**

(நன்கலம் = நல்ல கப்பல்;

கறி = மிளகு)

**மதுவை இறக்குமதி செய்தல்**

**யவனர், நன்கலம் தந்த தண்கமழ் தேறல்**

**பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்**

யவனர்கள் நல்ல மரக்கலங்களில் கொண்டுவந்த குளிர்ச்சி பொருந்திய நறுமணமிக்க மதுவை, ஒளி பொருந்திய வளையல்கள் அணிந்த இளம்பெண்டிர், பொன்னால் செய்யப்பட்ட கிண்ணங்களில் ஊற்றித் தர, அவ்வினிய மதுவை நாள்தோறும் பருகி மாறன் என்னும் பாண்டிய அரசன் களிப்புடனும், அமைதியுடனும் வாழ்ந்தான் எனப் புறநானூறு கூறுகின்றது.

KAMARAJ WOMENS COLLEGE

# அலகு - 2

## ஆட்சியர் வரலாறு

### மூவேந்தர் வரலாறு

சங்க காலத் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்று பேரரசர்கள் இருந்தனர். இம்மூவருக்குள்ளே ஆதிக்கப் போட்டிகளும், போர்களும் அடிக்கடி நடைபெற்று வந்தன. மூவேந்தர்களுள் வலிமை பெற்றவன் அவ்வப்போது பிற வேந்தர்களை அடக்கி ஆதிக்கம் செலுத்தினான். கரிகால் சோழன் ஆட்சிக் காலத்தில் தமிழகம் முழுவதும் அவனது ஆதிக்கத்தின் கீழ் வந்தது. சேரன் செங்குட்டுவன் காலத்தில் தமிழகத்தின் ஆட்சி அதிகாரம் அம்மன்னனிடம் இருந்தது. பாண்டியன் நெடுஞ்செழியன் பிற தமிழ் வேந்தர்களின் மேல் ஆதிக்கம் செலுத்தினான். மூவேந்தர்களே மட்டுமின்றிச் சில குறுநில மன்னர்களும் மலைகள் போன்ற இடத்தைப் பெற்று ஆட்சி செலுத்தி வந்தனர்.

### மன்னன்

சங்க காலத் தமிழகத்தில் மன்னனின் முடியாட்சி நிலவியது. மன்னனைக் கோ, வேந்தன், கோன், இறைவன் எனப் பல பெயர்கள் இட்டு அழைப்பது உண்டு. அரியணை உரிமை பொதுவாக மன்னனின் மூத்த மகனுக்குக் கிடைத்தது. வாரிசு உரிமை என்பது சொத்து உரிமை போன்றே காணப்பட்டது. பெண்களுக்கு வாரிசு உரிமை இல்லை. மன்னன் அரசாட்சி செய்து கொண்டிருக்கும்போது வாரிசு இன்றி இறந்தால் மக்கள் யானையின் உதவியுடன் மன்னனைத் தேர்ந்தெடுத்தனர். ன்னனுக்கு அவை (அரசவை) இருந்தது. அவ்வவையில் அரசுப் பணிகள் செய்யப்பட்டன. மன்னனே அவைக்குத் தலைவனாக இருந்தான். அவையில் அரசனோடு அரசியும் வீற்றிருக்கும் வழக்கம் இருந்தது. இவர்களோடு அமைச்சர்களும், அரசு அலுவலர்களும், புலவர்களும், மன்னனின் நண்பர்களும் கலந்து உரையாடினர். வேந்தர்களுக்கு அவையிருப்பது போலக் குறுநில மன்னர்களுக்கும் அவை இருந்தது. பாரியின் அவையில் கபிலரும், அதிகமான் அவையில் ஔவையாரும், செங்குட்டுவன் அவையில் பரணரும் அமர்ந்திருந்தனர். அவையில் இலக்கியங்கள் பற்றி விவாதங்கள் நடைபெற்றன. அரசனுக்கு ஆலோசனை வழங்கி நல்லாட்சியை ஏற்படுத்துவதே அவை உறுப்பினர்களின் முக்கியப் பணியாகும். அவையோர் மன்னன் அறம் தவறிச் செயல்பட்டபோது அவனுக்கு அறவுரை கூறி அவனை நல்வழிப்படுத்தினர்.

**“அறன் அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்**

**திறன் அறிந்தான் தேர்ச்சித் துணை” (திருக்குறள்,635)**

KAMARAJ WOMENS COLLEGE

இக்குறள்இ அரசன் அமைச்சர்களைத் தேர்ச்சித் துணையாகக் கொண்டான் என்பதைக் காட்டுகிறது.

பொதுமக்கள் அளித்த மனுக்களைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நீதி வழங்குவதே அவையில் நடைபெற்ற முக்கியப் பணியாகும். அவ்வப்போது மன்னன் ஆணைகளைப் பிறப்பித்தான். அவ்வாணைகள் முரசு கொட்டி மக்களுக்கு அறிவிக்கப்பட்டன. பொதுவாக அரசவை காலையில் கூடுவது வழக்கம். அதற்கு நாளவை என்றும் நாளிருக்கை என்றும் பெயர்கள் வழங்கி வந்தன. நாளவை என்பதற்கு நாளோலக்கம் (the durbar of a king) என்று பொருள்.

**செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல்**

**எம்மன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே**

**(புறநானூறு, 54:4-3)**

(சேரனது தலைமை உடைய அவைக்களத்தின்கண் செம்மாந்து சென்று புகுதல் எம்மைப் போன்ற வாழ்க்கையை உடைய இரவலர்க்கு எளிது. எம்மன-எம் அன்ன,எம்மைப் போன்ற.) அரசவையில் இசை முழங்கிக் கொண்டிருக்கும்.

இதற்குச் சான்று மலைபடுகடாமில் காணப்படுகிறது.

**இசை பெறு திருவின் வேத்தவை ஏற்ப**

**துறை பல முற்றிய பைதீர் பாணரொட**

**(மலைபடுகடாம்: 39-40)**

(இசையை எக்காலமும் கேட்கின்ற செல்வத்தினை உடைய அரசனுடைய அவை) ஆட்சியை மேற்கொண்டிருக்கும் மன்னனை அரச பதவியிலிருந்து நீக்க இயலாது. இருப்பினும் மன்னனே தானாக முன்வந்து மனம் நொந்து அரச பதவியை விட்டு விலகலாம். இதற்கான சான்றுகள் சங்க காலத்தில் கிடைக்கப்பெறுகின்றன. கரிகால் சோழன் வெற்றி கண்ட வெண்ணிப்போரில் சேரன் பெருஞ்சேரலாதன் முதுகில் காயமுற்றான். இந்த இகழ்ச்சியினைத் தாங்க முடியாமல் அச்சேர மன்னன் தன்னை மாய்த்துக் கொண்டான் என்பதனை இலக்கியம் வாயிலாக அறிய முடிகிறது. சேரன் கணைக்கால் இரும்பொறையைக் கழுமலம் என்னுமிடத்தில் சோழன் செங்கணான் தோற்கடித்தான். பின்பு சேரன் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டான். சிறையில் குடிக்கத் தண்ணீர் கேட்டபோது சிறைக்காவலன் இரும்பொறையை மதிக்காததால்இ அவன் நீரும் உணவும் உண்ணாமல் இருந்து உயிர் துறந்தான். இதுபோன்ற சம்பவங்களிலிருந்து

KAMARAJ WOMEN'S COLLEGE

மன்னர்கள் தாங்களாகவே அரச பதவியை விட்டுப் போகின்றனர் என்பது தெரிகிறது.

**முரசு**

போர் முரசு அரசரின் அதிகாரத்திற்கு அடையாளமாக விளங்கியது. அம்முரசு அரண்மனையில் உள்ள கட்டிலில் வைக்கப்பட்டு நன்கு பாதுகாக்கப்பட்டது. அமைதிக் காலத்தில் திருவிழாவை அறிவிப்பதற்காக முரசு கொட்டப்பட்டது. முரசு கொட்டுவதற்கு என்று பரம்பரை ஒன்று இருந்து வந்தது. போர் ஏற்படும்போது அது முரசு கொட்டி அறிவிக்கப்பட்டது. போரில் வீரர்களுக்கு உற்சாகம் ஏற்படும் வகையில் முரசு கொட்டப்பட்டது. இம்முரசு போரில் வெற்றி பெற்றதையும் அறிவித்தது. பகைவர் நாட்டை வென்று அந்நாட்டின் காவல் மரத்தை வெட்டி அதை யானையின் மீது ஏற்றித் தம் நாட்டிற்கு கொண்டு வந்து அம்மரத்திலிருந்து போர் முரசு செய்தனர்.

**வாள்**

சங்ககால மன்னர்கள் வாளையும் பெற்றிருந்தனர். போர் முரசு போல் மன்னர் வாளையும் போற்றி வணங்கி வந்தனர். அதனை நீரில் நீராட்டி மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தனர்.

**கொடி**

சங்க காலத்தில் மன்னர்கள் தங்களுக்கு என்று ஒரு அடையாளச் சின்னமாகக் கொடியைக் கொண்டிருந்தனர். சேரர் வில்கொடியையும், சோழர் புலிக்கொடியையும், பாண்டியர் மீன்கொடியையும் கொண்டிருந்தனர். போரின்போது பகைவரின் கொடியை அழிப்பது வீரர்களின் நோக்கமாக இருந்து வந்தது. கோட்டையில் கொடி பறக்கவிடப்பட்டது. பேரரசுகளின் தலைநகரிலும், அகன்ற தெருக்களிலும் கொடிகள் பறக்கவிடப்பட்டன. குறுநில மன்னர்கள் தனிக் கொடியைப் பெற்றிருந்தனர். அவர்கள் பேரரசருக்குக் கப்பம் கட்டி ஆட்சி செலுத்துபவர் என அறியலாம். கைப்பற்றப்பட்ட நாடு, வெற்றி பெற்ற நாட்டின் அடையாளச் சின்னத்தையும் கொடியில் பதித்துப் பறக்க விட வேண்டுமென்ற வழக்கம் நடைமுறையில் இருந்தது.

**மாலை**

சங்க கால மன்னர்கள் பல்வேறுபட்ட மாலைகளைப் பெற்றிருந்தனர். போர்க்களத்தில் பல்வேறு மன்னர்களின் படையைப் பிரித்து அறியும் பொருட்டு வேறுபட்ட மாலைகள் அணியப்பட்டன. சிற்றரசர்களும் மாலை அணிந்து கொண்டனர். சான்றாக ஆய் அண்டிரன் சுரபுன்னை மாலையையும், சேரர் பனம்பூ

KAMARAJ WOMENS COLLEGE

மாலையையும், சோழர் ஆத்திப்பூ மாலையையும் பாண்டியர் வேப்பம்பூ மாலையையும் அணிந்திருந்தனர்.

**காவல் மரம்**

சங்க காலத்தில் தமிழகத்தை ஆண்ட மன்னர் ஒவ்வொருவருக்கும் ஒரு காவல் மரம் இருந்தது. அம்மரம் தெய்வத் தன்மை பெற்றிருந்ததாக எண்ணப்பட்டது. காவல் மரம் வெட்டப்பட்டால் அந்நகரம் அழிந்துவிடும் என்பது நம்பிக்கையாக இருந்து வந்தது.

**சேரர்கள்**

சேரர் எனப்படுவோர் பண்டைத் தமிழகத்தில் புகழ் பெற்று விளங்கிய மூன்று நாடுகளுள் ஒன்றாகத் தமிழகத்தின் மேற்குக் கரையில் அமைந்திருந்த சேர நாட்டை ஆண்ட அரசவழியினரைச் சேர்ந்தவர்கள் ஆவர். சேரர்களின் கொடி விற்கொடி ஆகும். சேரர்கள் வில்லால் அம்பு எய்வதில் சிறந்தவர்களாக இருந்தனர் என்று உய்த்துணரலாம். மூவேந்தர்களில் ஒருவரான இவர்கள் கரூரையும், வஞ்சியையும் தலைநகராகக் கொண்டிருந்தனர். சில சேர அரசர்கள் தொண்டியையும் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். அந்நாடு அக்காலத் தமிழகத்தின் மேற்குக்கரைப் பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. பெரும்பாலும் இன்றைய தமிழ்நாட்டின் கொங்கு நாட்டுப்பகுதியே அக்காலச் சேர நாடு எனலாம். பல சங்கத் தமிழ் நூல்களும்கூடச் சேர நாட்டில் உருவாயின. மேலும் வேணாடு, குட்டநாடு, தென்பாண்டி நாடு ஆகிய கொடுந்தமிழ் மண்டிலங்களையும் (இன்றைய கேரளா) சேரன் ஆண்டான். தலைநகர் கரூர் வஞ்சி. இது ஆண்பொருணை (அமராவதி) ஆற்றின் கரையிலுள்ளதாகச் சங்க இலக்கியங்கள் கூறம். மேலும் காஞ்சி எனும் நொய்யலாறு இங்கே ஓடுகிறது.

**பதிற்றுப்பத்து**

சேர நாட்டை ஆண்ட அரச வம்சத்தினர் சேரர்கள் எனப்பட்டனர். சங்க நூல்கள் பலவற்றில் சேர மன்னர்கள் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. மிகப் பழைய சங்க நூல்களில் ஒன்றாகிய பதிற்றுப்பத்து பத்து சேர மன்னர்களைப் பாடிய பாடற் தொகுப்பு ஆகும். இதில் ஒவ்வொரு சேர மன்னன் பற்றியும் பத்துப் பாடல்கள் உள்ளன.

**சோழர்கள்**

சோழர் என்பவர் பழந்தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர்களுள் ஒரு குலத்தவராவர். மற்ற இருவர் சேரர்களும், பாண்டியர்களும் ஆவர். நெல் இயற்கையாகவோ, மிகுதியாகவோ விளைந்த நாடு சோழ நாடெனப்பட்டது. 'சோழ நாடு சோறுடைத்து' என்பது பழமொழி. எனவே சோறுடைத்த நாடு 'சோறநாடு'



KAMARAJ WOMEN'S COLLEGE

ஆகிப் பின் சோழ நாடாகியது என்பர். நெல்லின் மற்றொரு பெயரான சொல் எனும் பெயரே லகரம்-ழகரம் ஆகத் திரிந்து "சோழ" என்று வழங்கிற்று என்பார் தேவநேயப் பாவாணர்.

**கரிகாலன்**

கரிகால சோழன் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சோழ மன்னன் ஆவான். கரிகாலன் முற்காலச் சோழர்களில் மிகப் புகழ் பெற்றவன் இவனே. இவன் இளஞ்சேட்சென்னியின் மகன் ஆவான். [5] கரிகால சோழனுக்கு திருமாவளவன், மற்றும் பெருவளத்தான் என்னும் பட்டப்பெயர்களும் உண்டு. முதலாம் கரிகாலன் தாய் வயிற்றில் இருந்தபோதே அவன் தந்தையான இளஞ்சேட்சென்னி இறக்கவே, தாய் வயிற்றிலிருந்தபடியே அரச பதவி பெற்றான். கரிகாலன் என்பதற்குக் கருகிய காலை உடையவன் என்பது பொருள். இளம் வயதில் இவனுக்கு ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக இப்பெயர் இவனுக்கு வழங்கலாயிற்று.

கரிகாலன் சோழகுலத்தை ஒரு குறுநில அரசிலிருந்து காஞ்சி முதல் காவிரி வரை பரவ வழிவகுத்தான்.[6][7] பிற்கால வரலாற்றில் இவனது வெற்றிகளும் சாதனைகளும் மிகவும் மிகைப்படுத்தப்பட்டன. அரியாசனம் ஏறுவதற்கு தன் பிறப்புரிமையான அரச பதவியை இழந்து சில ஆண்டுகள் சிறையில் வைக்கப்பட்டான். சிறையினின்று இவன் தப்பிச்சென்று ஆட்சியைக் கைப்பற்றியதை வருணித்துள்ளனர். கரிகாலன் சிறையில் சிறைக்காவலரரைக் கொன்று தப்பித்தான், பிறகு படிப்படியாகப் புகழும் பெருமையையும் அடைந்தான்.

**பாண்டியர்கள்**

பண்டு = பண்டைய = பாண்டிய = பாண்டியர் என்று திரிந்திருக்கலாம் என்பது பாவாணர் கூற்று. [6] பாண்டியர் என்னும் சொல் பண்டையர் என்னும் சொற்றிரிபே என்றும் மொழி நூல் வல்லுநரும் மொழிவர்.[7] பண்டைய நாடு' என்பதே பாண்டிய நாடு' என மருவியதாக கூறுவர்.

**இடம்**

பாண்டியதேசம் சோழ தேசத்திற்குத் தெற்கிலும், சேர தேசத்திற்குக் கிழக்கிலும், ஒர் அகன்று பரவி இருந்த தேசம் ஆகும்.[9] இந்த பாண்டிய தேசத்தில் பூமி மேற்கே உயரமாகவும், கிழக்கே சரிந்தும் தென்வடலாய் நீண்டும், கடல் ஓரங்களில் சரிந்தும் மேடும், பள்ளமும், ஆகக் காணப்படும்.[10] இந்த தேசத்தில் நிறைய மலைகள் உண்டு, இவற்றில் பொதியம் மலையே மிகவும் உயரமானது. சிறு, சிறு குன்றுகளும், இத்தேசத்தின் நடுவிலுள்ள சமதளமான பூமியில் சிறு, சிறு காடுகளும் செழிப்பான நல்ல பூமி அதிகமாகவும் இருக்கும். இந்த தேசத்தின் தெற்கில் மலையம், தர்துரம், என்னும் பெரிய, வருடகிரி, வராககிரி, போன்ற சிறு

KAMARAJ WOMENS COLLEGE

மலைகளும் இருக்கும். இந்த கருநாடக தேசத்தில் யதுகிரி, செகயம் என்னும் குடகு மலையில் உற்பத்தியாகும் காவிரிநதி பாண்டிய தேசத்தை செழிக்க வைக்கின்றது. தெற்கில் பொதியம் மலையில் உற்பத்தியாகும் வைகை நதி சிறப்பு வாய்ந்தது[11] இந்த பாண்டிய தேசத்தில் நெல், வாழை, கரும்பு, போன்ற பயிர்களும், பருத்தி, பயறுவகைகளும் விளைகின்றன. காவிரிநதிக் கரையில் பாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்ட தஞ்சை, இராமேசுவரம் சிறப்பு வாய்ந்தவை.

தனிப்பாடல்களின் திரட்டு நூலான பெருந்தொகையில் பாண்டிய நாட்டின் எல்லைகள் பற்றிய பாடல் ஒன்று உள்ளது.

**வெள்ளாறு அதுவடக்கா மேற்குப் பெருவழியாம்**

**தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் - உள்ளார**

**ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்**

**பாண்டிநாட் டெல்லைப் பதி**

**தொன்மங்களில் பாண்டியர்கள்**

குமரிக் கண்டத்தில் தோன்றிய மனித சந்ததியினரே பாண்டியராக உருப்பெற்றிருக்கலாம் என்பது பொதுவாக நிலவும் கருத்து. இந்தியப்பெருங்கடலில் மூழ்கிவிட்டதெனக் கருதப்படும் குமரிக்கண்டத்தில் 72 நாடுகளும் தலைநகராக தென்மதுரையும் விளங்கியது. பாண்டிய மன்னர்களின் தலைநகராக விளங்கிய இத்தென்மதுரை கடற்கோளினால் அழிவுற்றது. இக்கடற்கோளில் அழியாது இருந்து எஞ்சிய நாடுகளின் தலைநகராக கபாடபுரம் விளங்கியது. இரண்டாம் கடற்கோளால் அந்நாடும் அழிவுற்றது. இவ்வழிவின் பின்னர் தற்போதுள்ள மதுரை பாண்டியர்களின் தலைநகராயிற்று. பாண்டிய மன்னர்களால் தமிழ்ச் சங்கம் வைத்து தமிழ் வளர்க்கப்பட்டது.

**பல்லவர்கள் வரலாறு**

பல்லவர்கள் கிபி நான்காம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டில் ஆளத் தொடங்கிவிட்டனர் எனலாம், ஆனால் ஏழாம் நூற்றாண்டில் தான் வலுப்பெற்றது. சிவஸ்கந்த வர்மனால் தொடங்கப்பெற்ற பல்லவர் ஆட்சி, சுமார் இருநூறு ஆண்டுகளுக்குப் பின் சிம்மவிஷ்ணு காலத்தில் விரிவடைந்தது. சங்க காலத்திற்குப் பிறகு பல்லவர் தம் ஆட்சியே தமிழ் நாட்டில் சிறந்த வரலாற்றுக்கு ஒப்பற்ற ஆட்சியாய் விளங்கிற்று எனலாம். பல்லவர் காலத்திலேயே தமிழ்நாட்டில் கலையும் இலக்கியமும், காவியமும் ஓவியமும், சித்திரமும் வளர்ந்த தோடு வளர்ந்த தோடு சமயங்களும் பல்வேறு போட்டிகளுக்கிடையே வளர்ந்து வரலாயின, தமிழகத்தின் இருண்ட காலத்தில் தலைதூக்கி இருந்த சமணமும்

KAMARAJ WOMENS COLLEGE

பௌத்தமும் ஏழாம் நூற்றாண்டுக்குப் பின் சைவ வைணவ சமயங்களுக்கு இடம் தந்து ஒதுங்கி விட்டன. பல்லவர் காலத்திலேயே அதற்கு முன் தமிழ்நாட்டில் கண்டிராத வகையில் கற்கோயில்களும் பல இலக்கியங்களும் தோன்றி வளர்ந்தன என்பது பொருந்தும். பல்லவர் காலம் தமிழ் வரலாற்றில் ஒரு சிறந்த காலமாகும்.

**கல்வெட்டுகள்**

பல்லவர்கள் யார் அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் எங்கிருந்து வந்தார்கள் என்ற ஆய்வு ஐம்பது ஆண்டுகளாகவே நடந்து வருகிறது. காஞ்சிபுரம் ஏறக்குறைய ஆறு நூறாண்டு காலம்இ கிபி 300 முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில், பல்லவர்களின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. எனினும் பல்லவர்கள் ஆதியில் வாழ்ந்த இடம் இன்னதென்பது, தமிழகத்துக்கு எப்படி வந்தனர் என்பது இன்னும் மறைபொருளாகவே இருக்கின்றன. சங்க இலக்கியங்களில் பல்லவர் பற்றிய குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. ஆனால் அவர் எழுதி வைத்துள்ள கல்வெட்டுகள், எழுதிக்கொடுத்த செப்பேடுகள் ஆகியவற்றைக் கொண்டு அவர்களை பற்றிய வரலாற்றை ஒருவராக வரையருக்கலாம்.

பல்லவர்களுடைய கல்வெட்டுகள் மகேந்திரவாடி, தளவானூர், பல்லாவரம், திருச்சிராப்பள்ளி, திருக்கழுக்குன்றம், வல்லம், மாமண்டுர், மண்டகப்பட்டு, சித்தன்னவாசல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பல்லவர்கள் முதன்முதல் பிராகிருத மொழியில் சாசனங்களைப் பொறித்து வந்தனர் (கிபி 250-350). பிறகு சமஸ்கிருத மொழியில் செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் பொறிக்கும் வழக்கத்தை மேற்கொண்டனர். கிபி ஏழாம் நூற்றாண்டில் கிரந்த-தமிழ் எழுத்தில் எழுதப்பட்டன.

**பல்லவர்களின் அரசியல்**

பல்லவர்களின் அரசியல் முறைகள் ஆதியில் சாதவாகனாரின் அரசியல் முறைகளுடனும், கௌடில்யரின் அர்த்தசாஸ்திரக் கோட்பாடுகளுடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. பல்லவருடைய பண்பாடுகள் பலவும் தமிழ் மன்னருடைய பண்பாடுகளுக்கு முற்றிலும் மாறுபாடாக காணப்பட்டன. அவர்கள் வடமொழியையே போற்றி வளர்த்தனர். இக்காரணங்களை கொண்டு பல்லவர்கள் தமிழகத்தை சேர்ந்தவர்கள் இல்லை என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**பல்லவ மன்னர்கள்**

**சிம்ம விஷ்ணு (கிபி 575-600)**

சிம்மவிஷ்ணு களப்பிரர்களை தோற்கடித்து பல்லவ பேரரசை தோற்றுவித்தவர். இவர் சேர, சோழ, பாண்டிய, மாளவரையும், சிங்களரையும்

KAMARAJ WOMEN'S COLLEGE

தோற்கடித்தார் என்று காசக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. இவருடைய ஆட்சி தெற்கில் கும்பகோணம் வரையில் பரவியிருந்தது. இவருடைய அரசவைப் புலவராக பாரவி என்பவர் 'கிராதார்ச்சுனீயம்' என்ற வடமொழி கவிதையை எழுதினார். சிம்மவிஷ்ணுவின் உருவமும் அவருடைய இரு மனைவிகளின் உருவமும் மாமல்லபுரத்தில் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.

**மகேந்திரவர்மன் (கிபி 600-630)**

சிம்மவிஷ்ணுவின் மறைவிற்குப் பிறகு அவனது மகன் மகேந்திரவர்மன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவன் ஆரம்பகாலத்தில் சமணனாக இருந்து அப்பரால் சைவனாக மாரியம்மன். இவன் காலத்தில் இரண்டாம் புலிகேசி காஞ்சியின் மீது படையெடுத்து வந்தான் அவனை புள்ளூரில் கிபி 620ல் அவனுக்கு எதிராக போர் புரிந்தான். மகேந்திர வர்மன் மாமண்டூர், மகேந்திரவாடி, திருவல்லம், திருச்சி, மண்டகப்பட்டு, சித்தன்னவாசல் முதலிய இடங்களில் கோயில்களை அமைத்து உள்ளார். மருமகளை முதலில் அமைத்த பெருமை இவரையே சேரும். இவருக்கு சித்திரக்கார புலி, மகாசேத்தகாரி, என பல பட்டங்கள் பெற்றவர். இவர் மிகச்சிறந்த நூல் ஆசிரியராகவும் இருந்துள்ளார். இவர் வடமொழியில் எழுதிய ' மத்தவிலாசப் பிரகாசனம்' என்ற நாடக நூல் சான்றாகும்.

**நரசிம்மவர்மன் I (கிபி 630-668)**

மகேந்திரவர்மன் அதுக்குப்பிறகு அவரது மகன் நரசிம்மவர்மன் ஆட்சிப் பொறுப்பேற்றார். கிபி 642 ல் இரண்டாம் புலிகேசியுடன் மணிமங்கலத்தில் போரிட்டு வாதாபியை வென்றார். புலிகேசிக்கு உரிய மாமல்லன் என்ற பட்டத்தைப் பெற்றான். இந்த போரில் வெல்வதற்கு பெரும் காரணமாக இருந்தவர் படைத்தலைவரான பரஞ்சோதியார் (பிற்காலத்தில் சிறுத்தொண்ட நாயனார் என அழைக்கப்பட்டார்).

நரசிம்மன் அமைத்த ஒற்றைக்கற் கோயில்கள் (பஞ்ச பாண்டவர் ரதம்) தனிச் சிறப்பு உடையன. சீன யாத்ரீகரான யுவான்சுவாங் இவரது காலத்திலே காஞ்சிபுரம் வந்தார். யுவான்சுவாங் தனது பயணக் குறிப்பில் காஞ்சியின் வளத்தையும், வீரத்தையும், கற்றோரையும், பௌத்த சமண மடங்களையும், அசோகன் நாட்டிய ஸ்தூபிகளையும் பெற்று, ஆறு மைல் அளவு அகலம் பெற்று கடற்கரையை நோக்கி 20 மைல் பரந்து இருந்தது எனக் கூறியுள்ளார்.

**இரண்டாம் மகேந்திரவர்மன் II (கிபி 668-670)**

முதலாம் நரசிம்மவர்மனுக்குப் பிறகு அவரது மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவர் காலத்திலும் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் மகன் விக்ரமாதித்தன் பெரும்படையுடன் வந்து

KAMARAJ WOMEN'S COLLEGE

பல்லவ நாட்டு உடன் போர் புரிந்தான். இந்தப் போரில் இரண்டாம் மகேந்திரவர்மன் உயிரிழந்தார். இரண்டு ஆண்டுகள் மட்டுமே இவர் ஆட்சி புரிந்தார்.

**முதலாம் பரமேஸ்வரன் I (கிபி 670-680)**

பரமேஸ்வரன் இரண்டாம் புலிகேசியின் மகன் முதலாம் விக்கிரமாதித்தனை நல்லூர் என்ற இடத்தில் போர் புரிந்து வெற்றி கண்டார். இந்த வெற்றியால் விக்ரமாதித்தன் பெற்றிருந்த 'இரண ரசிகன்' என்னும் பட்டத்தை பெற்றான். தன்னை இரண ஜெயன் என்றும் அழைத்துக் கொண்டான். காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள கூரம் என்னும் ஊரில் முதன் முதலில் கற்கோயில் (கற்றளி) அமைத்த பெருமை பரமேஸ்வரனுக்கு உண்டு.

**இரண்டாம் நரசிம்மன் II (கிபி 680-720)**

இரண்டாம் நரசிம்மன் காலத்தில் பெரும் போர் எதுவும் நிகழவில்லை. இவர் லட்சத்தீவுகளை வென்றான். சமய வாழ்விலும் கலை வாழ்விலும் பெரும் பங்கு கொண்டான். இதனாலேயே இவர் சிவ சூடாமணி, ரிஷப லாஞ்சனன், சங்கர பக்தன், நடன பிரியன், அத்யந்த காமன் முதலிய பெயர்களால் புலனாகும். இம்மன்னன் அமைத்த கோவில்கள் ஏராளம். அவற்றுள் தனிச் சிறு கோயில்களை கொண்ட கைலாசநாதர் கோயில் சிறப்புடையது, சுதையால் சிவனின் பல நடனங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாமலையில் கடற்கரையில் உள்ள பள்ளி கொண்டருளிய தேவர் கோயிலும், நாகப்பட்டினத்தில் சீன மன்னனுக்குக் கட்டிய பௌத்தப் பள்ளியும், இம்மன்னன் காலத்தே கட்டப்பட்டவையாகும். தண்டி என்னும் வடமொழி புலவரும், பூசலார் எனும் நாயனாரும் இவன் காலத்தவர் அவர்.

**இரண்டாம் பரமேசுவரவர்மன் (கிபி 720-730)**

இரண்டாம் நரசிம்மவர்மனுக்குப் பின் அவனது மகன் இரண்டாம் மகன் இரண்டாம் பரமேஸ்வரவர்மன் பத்தாண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்தான். இவர் தன் தந்தையை போன்று அமைதி வழியில் ஆட்சி நடத்தினார். இவர் திருவடியில் சிவன் கோவில் கட்டுவதில் தீவிரமாக இருந்தார். இதை உணர்ந்த சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்ரமாதித்தன் கங்க நாடு அரசன் துர்விநீதனின் துணையுடன் இரண்டாம் பரமேசுவரவர்மன் தோற்கடிக்கப்பட்டார். போர்க்களத்திலேயே உயிர்த்தெழுந்தார்.

**இரண்டாம் நந்திவர்மன் (கிபி 730-795)**

சிம்ம விஷ்ணுவின் பரம்பரை முடிய, அவன் தம்பி பீமவர்மன் பரம்பரையில் வந்த மன்னன் நந்திவர்மன். இவன்தான் இராட்டிரகூடர் மரபில் வந்தவர். இவன் காலத்தில் போர்கள் பல ஏற்பட்டன. பாண்டியர் சாளுக்கியர் இராட்டிரகூடர்

KAMARAJ WOMENS COLLEGE

முதலியவர்களுடன் போரிட்டான். உதயசந்திரன் என்ற படைத்தலைவன் மூலமாக இவன் தொடர் வெற்றிகளை கண்டான். இவன் வைணவ பற்றுள்ளவன். வைகுண்டநாதர் கோயிலைக் கட்டினான் திருமங்கை ஆழ்வார் இவன் சமகாலத்தவர். இவன் 65 ஆண்டுகள் ஆண்ட பெருமையுடையவன்.

**தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி**

12ஆம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசு உருவானபோது, விஜயநகரப் பேரரசர்கள் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளுக்கு தளபதிகளை அரசப் பிரதிநிதிகளாய் அமர்த்தி ஆட்சி செய்தனர். தொடக்க காலத்தில் இப்பகுதிகள் விஜயநகரப் பேரரசுக்கு அடங்கியிருந்தன விஜயநகரப் பேரரசு பலமிழந்தபோது, தங்கள் ஆட்சிப்பகுதிகளில் தங்களைப் பலப்படுத்திக்கொண்டு பேரரசிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டனர்.

செஞ்சி, காளஹஸ்தி, தஞ்சாவூர், மதுரைஆகிய நகரங்களை தலைநகராக் கொன்டு நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது.[1] [2] இவர்களின் தாய்மொழி தெலுங்கு ஆகும். தஞ்சையில் கி.பி. 1532-இல் நாயக்கர் ஆட்சி தொடங்கியது;[3] செஞ்சியில் கி.பி. 1526-இல் தொடங்கியது; மதுரையில் கி.பி. 1529-இல் தொடங்கியது. மதுரை நாயக்கர்களே நீண்ட காலம் ஆட்சி செய்தவர்கள். 1529-ஆம் ஆண்டு தொடங்கி கி.பி. 1736-ஆம் ஆண்டு வரை (மதுரையில் மட்டும் 207 ஆண்டுகள்) இவர்கள் ஆட்சி நிலவியது.

**மதுரை நாயக்கர்கள்**

கம்பணர் காலத்தில் மதுரையில் நாயக்கர் ஆட்சி தொடங்கியது. எனினும் விஜயநகர அரசர் கிருஷ்ணதேவராயர் காலத்திலேயே மதுரையில் நாயக்கர் ஆட்சி வலிவுபெற்றது. விசுவநாத நாயக்கர் கி.பி. 1529 இல் மதுரை ஆட்சியை ஏற்றார். அது முதற்கொண்டு நாயக்கராட்சி மதுரையில் வளம் பெற்றது. இவரே பாளையப்பட்டு ஆட்சிமுறையை வலிவு கொண்டதாக மாற்றி அமைத்தார். 72 பாளையப்பட்டுகளின் பொறுப்பில் நாட்டின் பகுதிகள் ஆட்சி செய்ய அனுமதிக்கப் பெற்றன. பாளையக்காரர்கள் தாங்கள் ஆளும் பகுதிகளில் கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியைத் தங்கள் செலவுகளுக்கும், இன்னொரு பகுதியைப் படைவீரர்களுக்கும், மற்றொரு பகுதியை மதுரை நாயக்கர்க்கும் என ஒதுக்க வேண்டி இருந்தது. மதுரை அரசு வேண்டும் போது படையுதவி செய்ய வேண்டி இருந்தது. இதுவே பாளையப்பட்டு ஆட்சி முறையாகும். விசுவநாதருக்குப்பின் நாயக்க மன்னர் பலர் மதுரையை ஆண்டனர். அவர்களில் புகழ்மிக்கவர்கள் திருமலை நாயக்கர், சொக்கநாதநாயக்கர், இராணிமங்கம்மாள் என்ற மூவராவர்.

KAMARAJ WOMENS COLLEGE

**சொக்கநாத நாயக்கர்**

நாயக்க மன்னர்களின் வரிசையில் மற்றொரு குறிப்பிடத்தக்க மன்னர் சொக்கநாத நாயக்கர். இவர் 23 ஆண்டுகள் மதுரைநாட்டை ஆண்டார். இவருக்குப் பல சோதனைகளும் தோல்விகளும் ஏற்பட்டன. தமிழகத்தின் ஒரு பகுதியில் மராட்டியர் ஆட்சி ஏற்பட்டு, அதன் பண்பாட்டுக்கூறுகளும் தமிழகத்திற் பரவின. சொக்கநாதர் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது; பசியால் துன்புற்று ஆயிரக்கணக்கானவர்கள் இறந்தனர். ஏகோஜி தஞ்சையைக் கைப்பற்றுவதற்கு முன்னர், தஞ்சையை ஆண்ட விஜயராகவ நாயக்கர், தமக்குப் பெண் கொடுக்க மறுத்தமையால் சொக்கநாதர் அவர் மீது போர் தொடுத்தார். விஜயராகவர் குடும்பத்தையே சொக்கநாதர் அழித்தார். சொக்கநாதர் இறுதிக்காலத்தில் அவருக்கு வேண்டியவர்களாலேயே சிறையில் அடைக்கப்பட்டார். பின்பு அவருடைய குதிரைப் படைத்தலைவரால் விடுவிக்கப்பெற்று மறுபடியும் நாட்டை ஆண்டார். சொக்கநாதர் அவசரபுத்தி உடையவர்; பழிவாங்கும் குணம் படைத்தவர். பிடிவாதம் கொண்டவர். எனவே அவர்காலத்தில் நாயக்கர் ஆட்சி நிலை தாழ்ந்தது.

**முத்து வீரப்ப நாயக்கர்**

சொக்கநாத நாயக்கர்- இராணி மங்கம்மாள், இவர்களின் மகன், முத்து வீரப்ப நாயக்கர் ஆட்சி செய்த போது, அவுரங்கசீப் என்ற மொகலாய மன்னர், தம் செருப்பை, நாடெங்கும் ஊர்வலமாக அனுப்பினார். அச்செருப்புக்கு எல்லாரும் மரியாதை செய்ய வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் வீரமிக்க முத்துவீரப்பர் அந்தச்செருப்பைத் தன்காலில் அணிந்து கொண்டு “உங்கள் மன்னர் இன்னொரு செருப்பை அனுப்பவில்லையா?” எனக் கேட்டார். ஏழே ஆண்டுகள் வாழ்ந்த முத்து வீரப்பர் இறந்த போது அவர் மனைவி கருவுற்றிருந்தாள். பிள்ளையைப் பெற்றுவிட்டு அவ்வரசியும் உயிர் விட்டாள்.

**இராணிமங்கம்மாள்**

சொக்கநாத நாயக்கரின் மனைவி மங்கம்மாள் அரசப் பொறுப்பை ஏற்றார். இராணி மங்கம்மாள் வீரமிக்கவர். அவர் தன் தளபதி நரசப்பய்யாவின் துணையால் தஞ்சை, மைசூர், திருவிதாங்கூர் படைகளை வென்றார். தம் கணவர் காலத்தில் இழந்த பகுதிகளை மீட்டார். மங்கம்மாள் செய்த அறச் செயல்கள் பலப்பல. சாலைகள், தண்ணீர்ப் பந்தல்கள், வாய்க்கால் சீரமைப்பு, சாலை ஓரம் மரம் நடுதல், அன்ன சத்திரங்கள் ஆகியன மங்கம்மாள் ஆட்சியில் சிறப்புநிலை அடைந்தன.

KAMARAJ WOMENS COLLEGE

## இசுலாமியர் ஆட்சி

தமிழகத்தில் இசுலாமியர் ஆட்சி பாண்டிய நாட்டில் கி.பி. 1142 ஆம் ஆண்டு துவங்கியது. சான்று தேவை கி.பி எட்டாம் நூற்றாண்டில் சேர மன்னனான சேரமான் பெருமாள் பாஸ்கர ரவிவர்மா என்பவரின் காலத்தில் இசுலாம் மேற்கு மலபார் கடற்கரை பகுதிகளில் அறிமுகமாகியது. பின்னர் இது கன்னட மற்றும் தமிழக பகுதிகளிலும் பரவியது. இதே சமயத்தில் வியாபார நோக்கத்தோடு சில அராபியஇ எகிப்து மற்றும் துருக்கிய குழுக்கள் தமிழகத்தின் சோழ மண்டல கடற்கரை பகுதிகளில் முகாமிட்டன. இவர்கள் மூலமாக இசுலாமிய மதத்தை ஏற்றுக்கொண்டவர்கள்இ வர்த்தக மற்றும் அயல்நாட்டு ஏற்றுமதியின் காரணமாக அந்தந்த பகுதியை ஆண்ட மன்னர்களுக்கு நெருக்கமானார்கள். இதன் மூலம் ஆட்சி அதிகாரத்திலும் பங்கு பெற்றனர். இதே நேரத்தில் சில வட இந்திய இசுலாமிய அரசுகளின் எல்லை விரிவாக்க நடவடிக்கைகளின் மூலமாகவும் சில இசுலாமிய அரசுகள் தமிழகத்தில் ஏற்பட்டன. வட இந்தியாவில் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் தான் இசுலாம் பரவியுள்ளது.

இஸ்லாமிய வரலாறு என்பது உலக முஸ்லிம்களின் வரலாற்றைக் குறிக்கும். இஸ்லாமிய வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களைப்பற்றிய ஆய்விற்கு "இஸ்லாமிய உலகு" மற்றும் "இஸ்லாமிய சமுகம் அல்லது உம்மாஹ்" ஆகிய கருதுகோள்கள் பற்றிய புரிதல் பயனுள்ளதாகும். இஸ்லாமிய உலகு என்பது தனியே முஸ்லிம்களை மாத்திரம் குறிக்கவில்லை. மாறாக இதர சமயங்களை பின்பற்றுவோரும் அதில் உள்ளடங்கியிருந்தனர். எனினும் இஸ்லாமிய உம்மாஹ் என்பது முஸ்லிம்களை மட்டுமே குறிக்கின்றது.

இஸ்லாமிய வரலாற்றைப் பொருத்தமட்டில், அது முஹமது நபியால் அறிவிக்கப்பட்ட நாள் முதல் வளர்ச்சியையே கண்டுள்ளது. முஹம்மது நபியின் வாழ்நாளிலேயே அது அராபியத் தீபகற்பம் முழுவதும் பரவியது. இது தவிர மற்றப் பகுதிகளிலும் இஸ்லாம் பரவத் தொடங்கியது. முஹம்மது நபிக்கு பிறகு வந்த ராசிதுன் கலிபாக்கள், உமய்யா கலிபாக்கள், அப்பாசிய கலிபாக்கள், உதுமானிய பேரரசு மற்றும் பல இசுலாமியப் பேரரசுகளின் காரணமாக இஸ்லாம் உலகின் அனைத்து பகுதிகளிலும் பரவியது. முஹம்மது நபியின் மரணத்திலிருந்து மூன்று நூற்றாண்டுகளின் பிற்பாடு மேற்கே அட்லான்திக் சமுத்திரம் தொடங்கி கிழக்கே மத்திய ஆசியா வரையான நிலப்பரப்பு இஸ்லாமிய பேரரசின் ஆட்சியின் கீழ் வந்தது. அத்துடன் இசுலாமிய நாகரிகம் உலகின் கலாச்சார விஞ்ஞான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செலுத்தியதோடு பல விஞ்ஞானிகளையும் வானியலளர்களையும் கணித மேதைகளையும் மருத்துவர்களையும் தத்துவவியளாளர்களையும் உலகிற்கு தந்தது. மேலும் இசுலாமிய உலகில் தொழினுட்பம், பொருளாதார உட்கட்டமைப்பு என்பனவும் சிறந்து விளங்கின.

KAMARAJ WOMENS COLLEGE

குர்ஆனை ஓதுதல் ஒரு முக்கிய விடயமாக இருந்ததன் காரணமாக உயர் எழுத்தறிவுவீதம் இஸ்லாமிய உலகில் காணப்பட்டது.

இக்காலப்பகுதி இஸ்லாத்தின் பொற்காலம் என வரலாற்றில் குறிக்கப்படுகிறது. மத்திய காலத்தின் பிற்பகுதியில் மொங்கோலிய படையெடுப்பினாலும் கறுப்புச் சாவு என்று வரலாற்றில் அறியப்படும் தொற்று நோய் பரவலினால் ஏற்பட்ட உயிரிழப்புகளினாலும் பாரசீகம் முதல் எகிப்து வரை பரவியிருந்த இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் நலிவடைந்தது. இதனை தொடர்ந்தே துருக்கிய உதுமானிய பேரரசின் எழுச்சி ஆரம்பமானது. எனினும் 18ம் 19ம் நூற்றாண்டுகளில் பல இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் நிலப்பரப்புக்கள் ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. மேலும் முதலாம் உலகப்போரின் பின்னர் உதுமானிய பேரரசின் பகுதிகள் செவ்ரெஸ்ச்ச் ஒப்பந்தத்தின் பிரகாரம் பல நாடுகளாக பிரிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் 1924ம் ஆண்டு முடிவுக்கு வந்தது. 20ம் நூற்றாண்டில் இசுலாமிய உலகை கம்யூனிசம் போன்ற பல்வேறுபட்ட சித்தாந்தங்கள் ஆட்கொண்டிருந்தபோதும் 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து முஸ்லிம் உலகின் அரசியல் விடயங்களில் இஸ்லாம் முக்கியமான பாத்திரத்தை வகிக்க ஆரம்பித்திருக்கிறது.

**மராத்தியர்கள் ஆட்சி**

மராட்டியப் பேரரசு அல்லது மராத்தியப் பேரரசு (Maratha Empire) தற்போதைய இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. இதன் காலம் 1674 முதல் 1818 வரை. இந்த சாம்ராஜ்ஜியத்தின் கீழ் தெற்கு ஆசியாவின் பல பகுதிகள் 2.8 மில்லியன் சதுர கிமீ பரப்பளவிற்கு மேல் இருந்தன. சிவாஜியால் இந்தப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. முகலாயப் பேரரசன் அவுரங்கசீப்பின் இறப்பை அடுத்து, பேரரசின் தளபதிகளான பேஷ்வாக்களால் விரிவாக்கப்பட்டது. 1761 இல் பானிப்பட் நகரில் ஆப்கானிய மன்னன் அகமது ஷா அப்தாலியுடன் இடம்பெற்ற மூன்றாம் பானிபட் போரில் மராத்தியர்கள் தோல்வியடைந்ததை அடுத்து, மராட்டிய பேரரசின் விரிவாக்கம் நிறுத்தப்பட்டது. இதன் பின்னர் இப்பேரரசு மராத்திய நாடுகளின் கூட்டமைப்பாகப் பிரிந்தது. பின்னர் 1817 – 1818 ஆண்டில் நடந்த மூன்றாம் ஆங்கிலேய மராட்டியப் போரில் மராத்திய கூட்டமைப்பு அரசுகள், பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியிடம் வீழ்ந்தது. மராட்டியப் பேரரசு அல்லது மராத்தியப் பேரரசு (Maratha Empire) தற்போதைய இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. இதன் காலம் 1674 முதல் 1818 வரை. இந்த சாம்ராஜ்ஜியத்தின் கீழ் தெற்கு ஆசியாவின் பல பகுதிகள் 2.8 மில்லியன் சதுர கிமீ பரப்பளவிற்கு மேல் இருந்தன. சிவாஜியால் இந்தப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. முகலாயப் பேரரசன் அவுரங்கசீப்பின் இறப்பை அடுத்து, பேரரசின் தளபதிகளான பேஷ்வாக்களால் விரிவாக்கப்பட்டது. 1761 இல் பானிப்பட் நகரில் ஆப்கானிய

KAMARAJ WOMENS COLLEGE

மன்னன் அகமது ஷா அப்தாலியுடன் இடம்பெற்ற மூன்றாம் பானிபட் போரில் மராத்தியர்கள் தோல்வியடைந்ததை அடுத்து, மராட்டிய பேரரசின் விரிவாக்கம் நிறுத்தப்பட்டது. இதன் பின்னர் இப்பேரரசு மராத்திய நாடுகளின் கூட்டமைப்பாகப் பிரிந்தது. பின்னர் 1817 – 1818 ஆண்டில் நடந்த மூன்றாம் ஆங்கிலேய மராட்டியப் போரில் மராத்திய கூட்டமைப்பு அரசுகள், பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியிடம் வீழ்ந்தது.

**வரலாறு**

பதினேழாம் நூற்றாண்டில் மராத்தியர்கள் சிவாஜியின் தலைமையில் ஒன்று கூடிஇ தற்கால மகாராட்டிராவில் வலிமையான இந்துப் பேரரசை நிறுவ, தக்காண சுல்தான்கள் மற்றும் தில்லி முகலாயர்களுடன் போரிட்டனர். ராய்கட் மலைக்கோட்டை மராத்திய அரசின் தலைநகராக விளங்கியது.

சிவாஜியின் மகன் சத்திரபதி சாகுஜி, அவுரங்கசீப்பின் மறைவிற்குப் பின்னர், தில்லி சிறைக்காவலிலிருந்து விடுபட்டு ராய்கட் வந்தார். அப்போது மராத்தியப் பேரரசை வழி நடத்தி கொண்டிருந்த அவரது சித்தி தாராபாயை நீக்கி விட்டு, தானே மராத்திய மன்னராக முடிசூட்டிக் கொண்டு, பாலாஜி விஸ்வநாத்தை தனது முதலமைச்சராக நியமித்துக் கொண்டார். பேஷ்வா பாலாஜி விஸ்வநாத் மற்றும் அவரது வழித்தோன்றல்கள் மராத்தியப் பேரரசின் வளர்ச்சிக்கு உதவ துணை நின்றனர். மராத்தியப் பேரரசு உச்சகட்டத்தில் இருந்த போது, தெற்கே தமிழ்நாடு முதல் வடக்கே தற்கால பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணம் வரையும், கிழக்கில் தற்கால மேற்கு வங்காளம் மற்றும் அந்தமான் வரையிலும், மேற்கே குஜராத் மற்றும் இராஜஸ்தான் வரையிலும் பரவியிருந்தது.

1761இல் நடந்த மூன்றாம் பானிபட் போரில் மராத்தியப் படைகள் துராணிப் பேரரசின் அகமது ஷா துரானியின் படைகளிடம் தோல்வியுற்றதால், மராத்தியப் பேரரசின் வளர்ச்சி அத்துடன் நிறைவடைந்தது. இப்போர் நடந்த பத்தாண்டுகளுக்குப் பின்னர் பேஷ்வா முதலாம் மாதவராவ், வட இந்தியாவில் மீண்டும் மராத்தியப் பேரரசை நிலைநிறுத்தினார். முதலாம் மாதவராவ் காலத்தில் பெரிய மராத்தியப் பேரரசை, சிறிதளவு தன்னாட்சியுடைய பகுதிகளாகப் பிரித்து வலிமைமிக்க படைத்தலைவர்களால் மராத்திய சிற்றரசுகள் எனும் பெயரில் ஆளப்பட்டது. மராத்திய பேரரசின் பரோடா இராச்சியத்தை கெயிக்வாட்களும், மால்வா மற்றும் இந்தூர் இராச்சியத்தை ஒல்கர் வம்சத்தவர்களும், குவாலியர் இராச்சியத்தை சிந்தியாக்களும், நாக்பூரை போன்சலேக்களும், பவார் குலத்தினர் தார் இராச்சியம் மற்றும் தேவாஸ் இராச்சியங்களை ஆண்டனர்.

KAMARAJ WOMENS COLLEGE

## சத்திரபதி சிவாஜி

போன்சலே எனும் சத்திரியக் குலத்தில் பிறந்த பேரரசர் சிவாஜி, தற்கால மகாராட்டிரா மாநிலத்தில் 1674ல் மராத்தியப் பேரரசை நிறுவினார். தக்கான சுல்தான் அடில் ஷாவிடமிருந்து மராத்தியப் பகுதிகளை விடுவித்து சுதந்திர இந்து மராத்திய நாட்டை நிறுவ உறுதி எடுத்துக் கொண்டார். ஜமராத்தியப் பேரரசின் முதல் தலைநகராக ராய்கட் கோட்டை விளங்கியது. சிவாஜி தன் இராச்சியத்தை காத்துக் கொள்ள தொடர்ந்து முகலாயப் பேரரசு மற்றும் தக்கான சுல்தான்களின் படைகளும் மோதிக் கொண்டே இருந்தார். 1674ல் சிவாஜிக்கு, சத்திரபதி பட்டத்துடன் மராத்தியப் பேரரசின் பேரரசராக மணிமுடி சூட்டப்பட்டது.

இந்தியத் துணைக்கண்டத்தின் புவிப்பரப்பில் 4.1% பகுதியை, மராத்தியப் பேரரசில் சிவாஜி கொண்டு வந்தார். சிவாஜியின் மறைவின் போது மராத்தியப் பேரரசில் 300 கோட்டைகளும், 40,000 குதிரைப்படை வீரர்களும், 50,000 தரைப்படை வீரர்களும் மற்றும் அரபுக்கடல் பகுதியில் கப்பற்படையும் இருந்தது.[10] சிவாஜியின் பேரன் சாகுஜியின் காலத்திலும், பேஷ்வாக்களின் ஆட்சிக்காலத்திலும் மராத்தியப் பேரரசு, அனைத்துத் துறைகளில் முழு வளர்ச்சியடைந்த பேரரசாக விளங்கியது. [11]

## சம்பாஜி

சிவாஜியின் இரண்டு மகன்கள் சம்பாஜி மற்றும் இராஜாராம் ஆவர். மூத்தவரான சம்பாஜி 1681ல் தன்னைத் தானே மராத்தியப் பேரரசராக அறிவித்துக் கொண்டார். சம்பாஜி கோவாவை ஆண்ட போர்ச்சுகீசியர்கள் களையும், மைசூர் மன்னர் சிக்க தேவராச உடையாரையும் வென்று பேரரசின் எல்லைகளை விரிவாக்கினார். சம்பாஜி, இராசபுத்திரர்களுடன் இணைந்து போரில் பிஜப்பூர் மற்றும் கோல்கொண்டா போன்ற தக்காண சுல்தான்களை வென்றார்.1689ல் அவுரங்கசீப்பின் படைத்தலைவர் முபாரக் கானால், சங்கமேஸ்வரர் எனுமிடத்தில் சில வீரர்களுடன் தங்கியிருந்த சம்பாஜியை, 1 பிப்ரவரி 1689ல் கைது செய்து, பகதூர்காட் எனுமிடத்தில் வைத்து 11 மார்ச் 1689ல் தூக்கிலிடப்பட்டார்.

KAMARAJ WOMENS COLLEGE

# அலகு - 3

## ஐரோப்பிய கால வரலாறு

### போர்ச்சுகீசியர்கள் வரலாறு

போர்த்துகல் என்றழைக்கப்படும் போர்த்துகல் குடியரசு (Ronaldo Republic, போர்த்துக்கேய மொழி: Republica Portuguesa) ஐரோப்பாக் கண்டத்தின் தென்மேற்குப்பகுதியில் ஐபீரிய மூவலந்தீவில் உள்ள ஒரு நாடு ஆகும். கண்ட ஐரோப்பாவின் மேற்குக் கோடியில் அமைந்த நாடும் இதுவே. இதன் வடக்கிலும் கிழக்கிலும் ஸ்பெயின் நாடும் மேற்கிலும் தெற்கிலும் அட்லாண்டிக் பெருங்கடலும் உள்ளன. கண்டப் போத்துக்கல் தவிர, அத்திலாந்திக் தீவுக்கூட்டங்களான அசோரெசுஇ மதேரியா என்பனவும் போர்த்துகலின் இறைமைக்குள் அடங்கும் பகுதிகள் ஆகும். இவை போர்த்துகலின் தன்னாட்சிப் பகுதிகள். போர்த்துகல் என்னும் பெயர்இ போர்ட்டசு கேல் என்னும் இலத்தீன் பெயர் கொண்ட அதன் இரண்டாவது பெரிய நகரான போர்ட்டோ என்பதில் இருந்து பெறப்பட்டது. லிஸ்பன் போர்த்துகலின் தலைநகரமும் நாட்டின் மிகப்பெரிய நகரமும் ஆகும். அலுவல் மொழி போர்த்துக்கீச மொழி ஆகும்.

தற்போதைய போர்த்துகல் குடியரசின் எல்லைகளுக்குள் அடங்கிய நிலப்பகுதிகள் வரலாற்றுக்கு முந்திய காலத்தில் இருந்தே தொடர்ச்சியாகக் குடியேற்றங்களைக் கொண்டதாக இருந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட காலம் உரோமரும், விசிகோதியர், சுவேபியர் ஆகியோரும் ஆட்சி செய்த பின்னர், 8-ஆம் நூற்றாண்டில் ஐபீரியத் தீவக்குறை முழுவதையும் இசுலாமியரான மூர்கள் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் இவர்கள் வெளியேற்றப்பட்டனர். கிறித்தவ மீட்பின்போது, 1139-ஆம் ஆண்டில், போர்த்துகல் கலீசியாவில் இருந்து பிரிந்து தனியான இராச்சியம் ஆனது. இதன்மூலம் ஐரோப்பாவின் மிகப் பழைய தேச அரசு என்ற பெருமையையும் பெற்றது. 15-ஆம், 16-ஆம் நூற்றாண்டுகளில், கண்டுபிடிப்புக் காலத்தின் முன்னோடியாக விளங்கியதன் விளைவாக, போர்த்துகல் மேற்கத்திய செல்வாக்கை விரிவாக்கி முதல் உலகப் பேரரசை நிறுவியதுடன், உலகின் முக்கியமான பொருளாதார, அரசியல், படைத்துறை வல்லரசுகளில் ஒன்றாகவும் ஆனது. அத்துடன், நவீன ஐரோப்பிய குடியேற்றவாதப் பேரரசுகளுள் மிகக் கூடிய காலமான ஏறத்தாழ 600 ஆண்டுகள் நிலைத்திருந்தது போர்த்துக்கேயப் பேரரசே. இது 1415-இல் செயுட்டாவைக் கைப்பற்றியதில் இருந்து 1999-இல் மாக்கூவுக்கும் 2002-இல் கிழக்குத் திமோருக்கும் விடுதலை அளிக்கும்வரை நீடித்து இருந்தது. இந்தப் பேரரசு, உலகம் முழுவதும் இன்று 53 நாடுகளை உள்ளடக்கியிருக்கும் பரந்த பகுதியில் பரவி இருந்தது. எனினும், போர்த்துகலின் அனைத்துலகத் தகுதி 19-ஆம் நூற்றாண்டில், குறிப்பாக அதன்

KAMARAJ WOMENS COLLEGE

மிகப்பெரிய குடியேற்ற நாடான பிரேசில் விடுதலை பெற்ற பின்னர், பெருமளவு குறைந்து போனது.

போர்த்துகல் மிகவும் கூடிய மனித வளர்ச்சிச் சுட்டெண்ணுடன் கூடிய வளர்ச்சியடைந்த ஒரு நாடு. வாழ்க்கைத் தரச் சுட்டெண் அடிப்படையில் உலகில் 19-ஆவது இடத்திலும் (2005), பூமராங்கின் உலகப் புதுமைகாண் சுட்டெண் அடிப்படையில் 25 ஆவது இடத்திலும் உள்ளது.[5] இது உலகில் கூடிய அளவு உலகமயமான நாடுகளில் ஒன்றும், அமைதியான நாடுகளின் ஒன்றும் ஆகும். இது ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் அவை ஆகியவற்றில் உறுப்பினராக இருப்பதுடன், இலத்தீன் ஒன்றியம், ஐபீரோ-அமெரிக்க நாடுகள் அமைப்பு, பொருளாதார ஒத்துழைப்புக்கும் வளர்ச்சிக்குமான அமைப்பு, நாட்டோ, போத்துக்கேய மொழி நாடுகள் சமூகம், யூரோசோன், செங்கன் ஒப்பந்தம் ஆகியவற்றின் தொடக்க உறுப்பு நாடாகவும் உள்ளது.

**டச்சுக்காரர்கள்**

டச்சு இந்தியா (Dutch India), (ஆட்சிக் காலம்:1605 – 1825) , நெதர்லாந்து நாடு, 1605 முதல் கிழக்கிந்திய டச்சு கம்பெனியை துவக்கி, இந்தியாவில் உள்ள கடற்கரை பகுதிகளை இந்திய மன்னர்களிடமிருந்து கைப்பற்றி, கோட்டை கொத்தளங்கள் மற்றும் குடியிருப்புகளை அமைத்து இந்தியாவில் 1605 முதல் 1825 முடிய வணிகம் செய்தனர்.

1824இல் ஏற்பட்ட ஆங்கிலேய-டச்சு உடன்படிக்கையின்படி, டச்சுக்காரர்கள் இந்தியாவில் தாங்கள் வணிகம் செய்த பகுதிகளை கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியாளர்களிடம் விட்டுக் கொடுத்து, மார்ச் 1825இல் இந்தியாவை விட்டு வெளியேறினர்.[1] [2]

**வணிகம்**

இந்தியாவின் மேற்கு கடற்கரை பகுதிகளில் மலபார், கண்ணனூர், கொச்சி, கொல்லம், காம்பத், சூரத், பரோடா, பரூச், கண்ணனூர், கன்னியாகுமரி பகுதிகளிலும், கிழக்கு கடற்கரை பகுதிகளில் தூத்துக்குடி, தரங்கம்பாடி, புலிக்காட், நாகப்பட்டினம், பரங்கிப்பேட்டை, மசூலிப்பட்டினம், டாக்கா, ஹூக்ளி, பிப்பிலி பகுதிகளிலும், மற்றும் அகமதாபாத், முர்சிதாபாத், ஆக்ரா, கான்பூர், பாட்னா, கோல்கொண்டா போன்ற பகுதிகளில் துணிமனிகள், நவரத்தினங்கள், பட்டுத்துணிகள், கண்ணாடி பொருட்கள், பீங்கான் பொருட்கள், அபின், மிளகு முதலியவற்றை இந்தியாவில் வணிகம் செய்தனர்.

KAMARAJ WOMENS COLLEGE

**டச்சு நாணயம்**

புலிக்காட் நாணயச்சாலையில் தயாரித்த, இந்துக் கடவுள் வெங்கடேஸ்வர் உருவம் பொறித்த தங்க பகோடா நாணயம், ஆண்டு 17-18ஆம் நூற்றாண்டு டச்சு இந்திய கம்பெனி, கொச்சி, மசூலிப்பட்டினம், நாகப்பட்டினம், பாண்டிச்சேரி மற்றும் புலிக்காட் பகுதிகளில் வணிகம் செய்ததுடன், தங்க பகோடா நாணயங்களை வெளியிட்டது.

**பிரெஞ்சுக்காரர்கள்**

மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போன்றே பிரான்சும் இந்தியாவுடனான வியாபாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டது. போர்த்துகீசியராலும், டச்சுக்காரராலும் தூண்டப்பட்ட பிரெஞ்சுக்காரர்கள் 1664-இல் உருவாக்கப்பட்ட பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி மூலம் தங்கள் வணிக செயல்பாடுகளை தொடங்கினர். ஏனைய ஐரோப்பிய நாடுகளில் வணிக நிறுவனங்கள் தனியார் வணிக நிறுவனங்களாக இருக்க பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி அரசர் பதினான்காம் லூயின் திட்டமாக அமைந்தது. அவருடைய நிதி அமைச்சரான கால்பர்ட் பிரஞ்சு கிழக்கிந்திய கம்பெனி நிறுவப்படுவதற்கு காரணமாக இருந்தார். பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி அரசால் தொடங்கப்பட்ட முயற்சியாக இருந்ததால் பொது மக்களின் ஆர்வத்தை அது ஈர்க்க தவறியது.

**பிரெஞ்ச் குடியேற்றம்**

இந்தியாவிலிருந்த பிரெஞ்ச் முகவரான பெர்பர் செப்டம்பர் 4, 1666-இல் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பிடமிருந்து அனுமதி ஆணை பெற்ற தங்களின் முதல் நிறுவனத்தை டிசம்பர் 1668-இல் டச்சுக்காரரின் எதிர்ப்பையும் மீறி கரோன் என்பவர் சூரத்தில் அமைத்தார்.

ஓராண்டிற்குள் 1669 ல் மார்காரா என்பவர் கோல்கொண்டா சுல்தானிடம் அனுமதி பெற்று மசூலிப்பட்டினத்தில் மற்றொரு நிறுவனத்தை அமைத்தார். அது இரண்டாவது வணிகத்தளம் ஆகும். இந்தியாவில் காலூன்ற வலுவான இடம் தேவை என்பதை உணர்ந்த நிதியமைச்சர் கோல்பர்ட், ஹேய் (ஜேக்கப் பிளான்குயிட் டி லா ஹேய், Blanquet de la Haye) என்பாரின் தலைமையில் கப்பற்படை ஒன்றை அனுப்பி வைத்தார்.

சாந்தோமிலிருந்தும் மயிலாப்பூரிலிருந்தும் டச்சுக்காரர்களை வெளியேற்றுவதில் பிரெஞ்சுக்காரர்கள் 1672-இல் வெற்றிபெற்றனர். டச்சுக்காரர்களுக்கு எதிராக பீஜப்பூர் சுல்தானின் பிரதிநிதியான உள்ளூர் ஆளுநர் செர்கான் லோடியின் உதவியை பிரெஞ்சுக்காரர்கள் நாடினர்.

KAMARAJ WOMENS COLLEGE

1673-இல் குடியேறுவதற்கு பொருத்தமான இடம் எனக்கருதி தனக்கு மானியமாக வழங்கப்பட்ட ஒரு கிராமத்தை பிரெஞ்சுக்காரர்களுக்கு வழங்கினார் செர்கான் லோடி. மார்ட்டின் என்பவர் அந்த இடத்தில் பாண்டிசேரியை நிறுவினார். அப்போது புதுச்சேரி ஒரு சிறிய மீனவ கிராமமாக இருந்தது. மடகாஸ்கரில் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் சூரத் வந்த பிரான்சிஸ் மார்ட்டின் என்பவர் புதுச்சேரியின் ஆளுநர் ஆனார். செயின் லூயிஸ் எனப்படும் கோட்டை கட்டப்பட்டது.

இந்தியாவில் பிரெஞ்சு குடியேற்றங்களின் அதிகார மையமாக புதுச்சேரியை உருவாக்கினார். "நாங்கள் கடந்து சென்ற கிராமப்புற பகுதி (அதாவது புதுச்சேரிக்கு வெளியேயுள்ள பகுதி) மிக நன்றாக விவசாயம் செய்யப்பட்டிருந்ததுஇ மிக அழகாகவும் இருந்தது. அரிசி ஏராளமாக காணப்பட்டது. எங்கே நீர் இருந்ததோ அங்கே பருத்தி விளைவிக்கப்பட்டது. புதுச்சேரி நிலப்பரப்பை குறித்து பிரான்சிஸ் மார்டின் இவ்வாறு தனது நாட்குறிப்பில் எழுதியுள்ளார். 1673 ம் ஆண்டு வங்காள முகலாய ஆளுநர் செயிடகானின் அனுமதி பெற்று சந்தன்நகருக்கு (சந்திரநாகூர்) என்னுமிடத்தில் வணிகத்தலம் அமைக்கப்பட்டது.

**டச்சுக்காரர்களுடன் போட்டியும் போர்களும்:**

புதுச்சேரியை தங்கள் குடியேற்றமாக்கும் முயற்சியில் பிரெஞ்சுக்காரர்கள் மிகவும் சிரமப்பட்டனர். தங்களின் முக்கிய போட்டியாளரான டச்சுக் காரர்களை முதலில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பிரான்ஸ் மற்றும் ஹாலந்து இரண்டும் 1672-இல் இருந்து தொடர்ந்து போர்கள் செய்து கொண்டிருந்தன. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கு போதுமான நிதி, ஆயுதம், வீரர்கள் இல்லை. ஏனெனில் அவை வங்காளத்தில் இருந்த மற்றொரு பிரெஞ்சு குடியேற்றமான சந்தன்நகருக்கு(சந்திரநாகூர்) கொண்டு செல்லப்பட்டு இருந்தன. ஆகவே 1693-இல் புதுச்சேரியை டச்சுக்காரர்கள் எளிதாக கைப்பற்ற முடிந்தது. புதுச்சேரி தொடர்ந்து ஆறு ஆண்டுகள் டச்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. 1697-இல் ரிஸ்விக் உடன்படிக்கையின்படி புதுச்சேரி மீண்டும் பிரெஞ்சுக்காரர்களுக்கு தரப்பட்டது. இருந்தபோதிலும் 1699-இல் தான் அது பிரெஞ்சுக்காரர்களின் வசம் ஒப்படைக்கப்பட்டது. 1706 இல் பிரான்சிஸ் மார்டின் இயற்கை எய்தும் வரை புதுச்சேரியின் ஆளுநராக இருந்தார்.

பிரெஞ்சுக்காரர்கள் மேற்கொண்ட பெரு முயற்சியின் விளைவாக 1725-இல் மாஹியையும், 1739-இல் காரைக்காலையும் பெற்றனர். வங்காளப் பகுதியில் காசிம்பஜார், சந்தன் நகர், பாலசோர் ஆகிய இடங்களில் தங்களது குடியேற்றங்களை நிறுவி விரிவு படுத்துவதில் பிரெஞ்சுக்காரர்கள் வெற்றி பெற்றனர்.

KAMARAJ WOMENS COLLEGE

பியரி பெனாய்ட் டுமாஸ் என்பவர் (1668-1745) புதுச்சேரியின் மற்றுமொரு சிறந்த ஆளுநராவார். இருந்த போதிலும் தங்களை விட மிகவும் வலிமை வாய்ந்த போட்டியாளரான ஆங்கிலேயரின் பயமுறுத்தல்களை அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. கி.பி.1742-ஆம் ஆண்டு டியூப்ளே பிரெஞ்சு கவர்னராக பொறுப்பேற்றார். இவரது காலத்தில் பிரெஞ்சு ஆதிக்கம் மேலும் வளர்ச்சியடைந்தது.

இதற்கிடையில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆதிக்கப்போட்டி தொடங்கிது. இது இந்தியாவில் கர்நாடக போர்களாக பிரதிபலித்தன. இதன் இறுதியில் பிரெஞ்சுக்காரர்க்ள தாங்கள் சேகரித்த செல்வம் அனைத்தையும் ஆங்கிலேயர்களிடம் இழந்தனர். இந்தியாவில் ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டினர். பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினர்.

**டேனிஷ்காரர்கள்**

சோழமண்டலக் கடற்கரை என்பது பன்னாட்டு வணிகப் பகுதியாக பொ.ஊ.மு. 3ஆவது நூற்றாண்டிலிருந்து விளங்கியது. ஐரோப்பிய காலனிய அரசுகளான பிரித்தானியர், பிரஞ்சியர், டச்சு, போர்த்துகீசியர் போன்றோரால் பொ.ஊ. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியின் போது இந்தியாவுடன் வணிகம் செய்ய கடல்சார் வர்த்தக நிறுவனங்கள் நிறுவப்பட்டன. டேனிஷ் கிழக்கு இந்தியக் கம்பெனி டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் 1616 இல் நிறுவப்பட்டு, அட்மிரல் ஓவ்கிட் (பொ.ஊ. 1594-1660) என்பவர் அனுப்பப்பட்டார். ஓவ்கிட் தஞ்சாவூர் ஆட்சியாளரான இரகுநாத நாயக்கருடன் (1600–1634) 1620 ஆம் ஆண்டில் போர்த்துகீசியரின் எதிர்ப்பு இருந்தபோதிலும் ஒப்பந்தம் மேற்கொண்டார். அதன்படி மொத்தம் 8 கி.மீ (5.0 மைல்) க்கு 4 கி.மீ (2.5 மைல்) பரப்பளவு இடத்தை ஆண்டு வாடகை ரூ 3111 என்ற ஒப்புதலுடன் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி தரங்கம்பாடியின் அண்டைக் கிராமங்களில் இருந்து வரி வசூலிப்பதில் டேனிஸ் அனுமதி பெற்றது. இந்த ஒப்பந்தம் ஒரு தங்க இலையில் போடப்பட்டது. இந்தக் கையெழுத்துப் பிரதி கோபன்ஹேகனில் உள்ள டேனிஷ் அரச காப்பகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

டேனிஷ் கோட்டைகளில் இரண்டாவது பெரிய கோட்டை இதுவே ஆகும். முதல் கோட்டை யாது என்றால் அது ஷேக்ஸ்பியருக்கு ஹேம்லட் எழுத உத்வேகம் அளித்த க்ரோன்போர்க் கோட்டையாகும். இக்கோட்டை உள்ளூர் தொழிலாளர்கள் உதவியுடன் டேனிஷ் பாணியில் ஓவ்கிட்டால் கட்டப்பட்டது. கோட்டையை ஒட்டிய தரைத்தளம் கிடங்காகவும், படையினரின் ஓய்வறையாகவும் பயன்படுத்தப்பட்டது. அடுத்த தளம் ஆளுநர் மற்றும் மத குருக்கள் போன்றோர் வசிக்குமிடமாக இருந்தது. டேனிஷ் கோட்டை 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் டேனிஷ்காரர்களின் மையமாக இருந்தது. முதலில் இப்பகுதி ஒரு மீன்பிடி கிராமமாக இருந்தது. கோட்டை கட்டியபிறகு இங்கிருந்து பருத்தி, ஜவுளி



KAMARAJ WOMEN'S COLLEGE

போன்றவற்றை ஏற்றுமதி செய்யும் முதன்மை வாணிகத் துறைமுகமாக ஆனது. 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்நகரத்தின் வர்த்தகரீதியான முக்கியத்துவம் குறைந்துஇ வங்காளத்தின் சிறீராம்பூர் ஜவுளி உற்பத்தி மையமாக ஆனது. என்றாலும் தரங்கம்பாடியிலேயே காலனியின் தலைமையகம் இருந்து வந்தது. 1845இல் இந்த நகரமும், கோட்டையும் பிரித்தானியருக்கு விற்கப்பட்டது. இதன்பிறகு தரங்கம்பாடியும் அதன் கோட்டையும் தன் வணிக முக்கியத்துவத்தை இழந்தன.

**பாளையக்காரர்கள்**

பாளைக்காரர் (Polygar) தமிழகத்தில் விஜயநகரப் பேரரசின் ஆட்சி நடைபெற்றபோதுஇ 1529-க்கும், 1564-க்கும் இடையில் மதுரை மண்டலத்தை நிர்வகித்தவர் விசுவநாத நாயக்கர். இவரால் தனது மாகாணங்களில் அதிகாரங்களைப் பெற விரும்பிய சிறுகுடித் தலைவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அவரது அமைச்சர் அரியநாத முதலியாருடன் கலந்தாலோசித்துஇ ஆந்திராவை ஆண்ட காக்கத்தியர் இராச்சியத்தில் நடைமுறையில் இருந்த பாளையக்கார முறையை 1529-இல் ஏற்படுத்தினார். இது இம்முறையின் கீழ் மதுரை மண்டலம் 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. இப்பாளையம் ஒவ்வொன்றும் ஒரு படைநிலை ஆகும். இப்பாளையத்தை நிர்வாகம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட தலைவன் பாளையக்காரர் எனப்பட்டார். 17ஆம் மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளின் பிற்பகுதியில் தெலுங்கு பகுதி மற்றும் தமிழ்ப் பகுதியின் பெரும்பகுதியைக் கட்டுப்படுத்திய பாளையக்காரர்கள் பெரும்பாலோர்இ கள்ளர்இ மறவர் மற்றும் வடுகா சமூகங்களிலிருந்து வந்தவர்கள். ஒவ்வொரு பாளையக்காரரும் ஒரு பிரதேசத்தின் அல்லது பாளையத்தின் உரிமையாளராக கருதப்பட்டார். இந்த பாளையக்காரர்கள், நாயக்கர்களுக்கு தேவை ஏற்படும் போது இராணுவம் மற்றும் இதர உதவிகளை முழு மனதுடன் செய்தனர். பாளையக்காரர்கள் வரிகளை வசூலித்து, தாங்கள் வசூலித்த வரிப்பணத்தில் மூன்றில் ஒரு பங்கினை மதுரை நாயக்கர்களுக்கும், அடுத்த மூன்றில் ஒரு பங்கினை இராணுவ செலவிற்கும் கொடுத்துவிட்டு மீதியை அவர்கள் சொந்த பாளையக்காரச் செலவிற்கு வைத்துக்கொண்டனர். 1801 ஜூலை 31ல் செய்துகொள்ளப்பட்ட கர்நாடக உடன்படிக்கைப்படி தமிழ்நாட்டின் மீது ஆங்கிலேயர் நேரடி கட்டுப்பாட்டைப் பெற்றனர் இதனால் பாளைக்காரர் முறை நீக்கப்பட்டது.

**ஆங்கிலேயர்கள்**

ஆங்கிலேயர் (English) எனப்படுவோர் இங்கிலாந்தை நாடாகக் கொண்ட ஆங்கிலம் பேசும் இனக்குழுவினர் ஆவர். ஆங்கில அடையாளம் ஆரம்ப மத்தியகால மூலத்தை கொண்டது. இது பண்டைய ஆங்கிலம் எனவும் அறியப்படுகிறது. இது சுமார் கி.பி 5 ஆம் நூற்றாண்டில் பெரிய பிரித்தானியாவுக்கு



KAMARAJ WOMENS COLLEGE

குடியேறிய ஜெர்மானிக் மக்களில் ஒரு குழுவின் இனப்பெயர் ஆங்கில்கள் என்பதில் இருந்த பெறப்பட்டது. இங்கிலாந்து ஐக்கிய பிரித்தானிய நாடுகளில் ஒன்றாகும்.

## பாளையக்காரர்கள்

**வீரபாண்டிய கட்டபொம்மன்:**

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் முப்பது வயதில் ஆட்சிக்கு வந்தான். அப்போது ஆங்கில கம்பெனி வளர்ந்து கொண்டு வந்த சமயம். ஆற்காடு நவாபின் ஆடம்பர செலவிற்காக கம்பெனி கொடுத்த பணத்திற்காக திருநெல்வேலி சீமை பகுதியில் வரி வாங்கும் உரிமையை இழந்தான். இந்த மாதிரி சூழ்நிலையில் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் அரசன் ஆனான். வரி வாங்குவதில் கெடுபிடி காட்டிய ஆங்கில அதிகாரிகளுக்குள் எந்த வித்தியாசமும் இல்லை கட்டபொம்மனுக்கும் அப்படி ஒரு நிலை வந்தது. 1797 இல் கம்பெனிக்கு எதிராக வேண்டிய சூழ்நிலை கட்டபொம்மனுக்கு வந்தது. இந்த சமயத்தில் ஜாக்சன் தன்னை சந்திக்க வருமாறு கட்டபொம்மனுக்கு ஆணையிட்டான் கட்டபொம்மன் போனான். ஜாக்சன் அவனை 23 நாட்கள் காத்திருக்க வைத்தான். 400 மைல் தூரம் அலைக்களித்தான். கட்டபொம்மனை 3 மணி நேரம் நிற்க வைத்து பேசினான். இதன் பிறகு தான் கட்டபொம்மனுக்கு கம்பெனியின் மேல் வெறுப்பு வந்தது. எதிர்த்தான். பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை பிடித்தான். இதன் பிறகு கட்டபொம்மன் புதுக்கோட்டை காட்டுப்பகுதிகள் மறைந்து கொண்டான். விஜயராமன் கட்டபொம்மனை பிடித்து ஜாக்சன் திரையிடம் ஒப்படைத்தான். பாணர்மேன் ஆணையின்படி கட்டபொம்மன் கயத்தாரில் தூக்கிலிடப்பட்டான்.

**கான்சாகிப்:**

இவர் மதுரையில் சுபேதராக இருந்தபோது அதுவரை இல்லாத அமைதி மதுரையில் நிலவியது. கள்ளரிடமும் கழகம் இல்லை. இந்து கோயில்களில் விழாக்கள் நடந்தன. விவசாயிகள் முழு நேர தொழில் செய்யும் அளவுக்கு சூழ்நிலை மாறியது. சட்டம் ஒழுங்கு சீர்குலையவில்லை.

**மருதுபாண்டியர்:**

பெரிய மருது, சின்ன மருது எனும் இரண்டு சகோதரர்களும் சிவகங்கை சீமையில் 21 ஆண்டுகள் ஆட்சி செய்தனர் இவர்கள் நாட்டிற்கு செய்த ஆக்க பணிகள் பல.

KAMARAJ WOMENS COLLEGE

**இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாடு**

ஆங்கிலேயர் ஆதிக்கத்தை ஆரம்பத்தில் இருந்து தமிழகம் எதிர்த்து வந்திருக்கிறது. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் எதிர்ப்பு கிளர்ச்சியாக உருவெடுத்து இருக்கிறது.

**சென்னையில் இந்திய தேசிய காங்கிரஸ்**

மக்களின் குறைகளை அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்கும் நோக்கத்துடன் 1844 ல் லட்சுமி நரசிம்மசெட்டியும்இ சோமசுந்தரசெட்டியும் முன்னின்று சென்னைவாசிகள் சங்கம் ஒன்றை துவக்கினர். அதே நோக்கத்துடன் 1868 ல் சென்னை மாகாண சபை துவங்கப்பட்டது.

**ஒத்துழையாமை இயக்கம்:**

சூரத் மாநாட்டில் காங்கிரஸ் இரண்டாக பிளவுற்றது. பின்னர் தமிழ்நாட்டில் கோக்கலேயின் ஆதரவாளர்கள் சீனிவாச சாஸ்திரியின் தலைமையில் இயங்கினர். திலகரின் ஆதரவாளர்களான வ.உ.சி.சுப்பிரமணிய சிவா இபாரதியார் ஆகியோரின் இடிமுழக்கங்களுக்கு முன்னால் தமிழகத்தில் மிதவாதிகளின் குரல் எடுபடாமல் போனது. காந்தியடிகளின் வருகையுடன் விடுதலை இயக்கத்தில் புதிய வேகம் பிறந்தது. விஜயராகவாச்சாரியார் தலைமையில் நாக்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் காந்தியடிகள் கொண்டு வந்த ஒத்துழையாமை இயக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காங்கிரசின் பொதுச்செயலாளர்களில் ஒருவராக இருந்த ராஜகோபாலாச்சாரியார் தமிழ்நாட்டில் ஒத்துழைமை இயக்கத்திற்கு தலைமை தாங்கினார். பலர் அரசின் தடையை மீறி கைதாகினர். 1922 ஜனவரி 13ஆம் நாள் வேல்ஸ் சிலவரசன் சென்னை வந்தபோது அறப்போராட்டம் தீவிரமாகியது. சென்னையில் முழு கடை அடைப்பு நடைபெற்றது. எல்லா இடங்களிலும் அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்நிலையில் சவுரி சவுராவில் நடந்த படுகொலையின் காரணத்தால் காந்தியடிகள் அறப்போராட்டத்தை விளக்கிக் கொண்டார்.

KAMARAJ WOMENS COLLEGE

## அலகு - 4

## விடுதலைக்குப் பின் தமிழ்நாட்டு வரலாறு:

### 1.மொழிப்போராட்டம்

'மொழி' என்றால் என்ன என்பதை முதலில் புரிந்து கொள்வோம். மொழி என்றால் ஒருவருக்கொருவர் பேசுவதற்காக பயன்படும் ஒரு கருவி என்பது ஒரு எளிய பொருள். ஆனால் அதைத் தாண்டி, மொழி என்பது பல பரிமாணங்களை கொண்டதாகும். மொழி என்பது தனி ஒருவருடைய அடையாளம். மொழி என்பது ஒரு இனத்தின் அடையாளம். மொழி என்பது ஒரு தேசியத்தின் அடையாளம். மொழி என்பது ஒரு இனத்தின் கொள்கைகளின் அடையாளம். மொழி என்பது ஒரு இனத்தின் கோட்பாடுகளின் அடையாளம். மொழி என்பது ஒரு இனத்தின், எல்லா கலாச்சார, பண்பாட்டுக் கூறுகள, விழுமங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு கட்டமைப்பாகும். நான் இப்போது சொன்னது எல்லா மொழிகளுக்கும் பொருந்தும்.

### தமிழ்மொழி

தமிழ்மொழி என்று வரும்போது, மற்ற மொழி அறியாத பல தனி சிறப்புகள் இருக்கின்றன. தமிழ் மொழி உலகின் எல்லா மொழிகளிலும் மூத்த மொழியாகும். ல மொழிகளுக்கு தாயாகும். மேலும் இதமிழ் மொழி எல்லா துறைகளிலும் சிறந்து விளங்கும் ஒரு மொழியாகும். மற்ற மொழிகளுக்கு இல்லாத இன்னொரு பெரும் சிறப்பு தமிழுக்கு உண்டு. தமிழ் மொழியை பேசும் வரை, அந்த பேசும் இனம் அழியாமல் பாதுகாக்கப்படும் ஒரு உள் அமைப்பு அந்த மொழியில் மறைந்து இருக்கிறது. அதாவது தமிழினத்தை அழியாமல் பாதுகாக்கும் மறைந்திருக்கும் தற்காப்பு கருவிகள் தமிழின் உள்ளே உள்ளன. அது எப்படி என்று பார்ப்போம்!

### தமிழ்மொழி சிறப்பு

மற்ற மொழிகளைப் போல தமிழ் மொழியில் குழப்பமான சொல்லமைப்பு / வாக்கிய அமைப்பு இல்லை. தமிழ்மொழியின் சொல்லமைப்பு மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்தது. ஒரு சொல்லின் பொருள் தெளிவாக, அருமையாக, ஒரே அறுதியான பொருளாக இருக்கும். இதனால் எந்த மொழியிலிருந்து மொழி பெயர்க்கும் போதும் தமிழில் ஒரு தெளிவான பொருளே விளங்கும். எடுத்துக்காட்டாக எதிரி ஒருவன் வந்து அவனுடைய மொழியில் ஒன்றை சொல்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அது, இந்தி என வைத்துக் கொள்வோம். இந்தி மொழியில் 'நேற்று' என்பதற்கு 'கல்' என்று சொல்வார்கள். 'நாளை' என்பதற்கும் 'கல்' தான். ஆக, இந்தி மொழியில் 'நாளை வந்தேன்' என்று கூட சொல்லலாம்! ஆங்கிலத்தில் 'ஹாட்ஸ்பாட்' என்றால் 'இணையத்தில் ஒரு

KAMARAJ WOMENS COLLEGE

தயாராக இருக்கும் இணைப்பு புள்ளி 'என்று பொருள். ஆனால் தமிழில் 'ஹாட்ஸ்பாட் ' என்றால் 'சூடான இடம் 'என்று பொருள். தமிழின், இந்த தெளிவான சொல் அமைப்பு, தமிழர்களை ஒருநாளும் தவறான வழியில்/அழிவுப் பாதையில் போகாமல் காப்பாற்றும் ஒரு பெருங் கருவியாகும். தமிழில் அன்றாட வாழ்வில், அறிவுக்கெதிரான, மூடத்தனமான, எதிரியை வீழ்த்தும் கபடங்கள் எதுவும் சாத்தியமில்லை. தமிழனின் சிந்தனை அறிவுப் பூர்வமாய் இருப்பதை அம் மொழி உறுதி செய்கிறது. எந்த ஒரு மொழியும் அந்த குறிப்பிட்ட இனத்தின் முக்கியமான அடையாளமாகும். அந்த இனத்தின் கொள்கைகள், கோட்பாடுகள், இலக்கியங்கள், வாழும் முறைகள், பண்பாட்டு நெறிகள் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய ஒரு சொல் தான் 'மொழி' என்பது. ஆக ஒரு மொழியை அழித்தால் அந்த இனத்தை அழிப்பதற்கு சமமாகும். இது எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். தமிழ் மொழி உலகத்தின் மூத்த மொழி என்பதால் தனிச் சிறப்புகள் பல உள்ளன. தமிழ் மொழி தன் வளமையினால், செழுமையினால், பல் துறை தலைவர்களை உருவாக்கியிருக்கிறது.

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்**

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் (Anti-Hindi Imposition agitation) என்பது இந்தி மொழியை, இந்தியாவின் ஒரே அலுவல் மொழியாக்கும் மற்றும் இந்தி மொழி பேசாத மாநிலங்களின் கல்விப் பாடத்திட்டங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்கும் இந்திய அரசின் முயற்சிக்கு எதிராகத் தமிழக மக்களால், பெரும்பாலும் சனநாயக, அற வழிகளில் நடத்தப்பட்ட போராட்டமாகும்.

1937ஆம் ஆண்டு முதல் முறையாக இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது சென்னை மாகாணத்தில் முதல் முறையாக வெற்றி பெற்ற காங்கிரசுக் கட்சியின் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி தலைமையில் அமைந்த அரசு, பள்ளிகளில் இந்தி படிப்பதைக் கட்டாயமாக்கியது. அதை எதிர்த்து, எதிர்க்கட்சியாக விளங்கிய நீதிக்கட்சியும் பெரியார் ஈ. வெ. இராமசாமியும் மூன்று ஆண்டுகள் உண்ணாநோன்பு, மாநாடுகள், பேரணிகள் மற்றும் மறியல் போராட்டங்கள் நடத்தினர். அரசின் காவல் நடவடிக்கைகளில் இரண்டு போராட்டக்காரர்கள் இறந்தனர்; பெண்கள், சிறுவர்கள் உட்பட 1,198 பேர் கைது செய்யப்பட்டனர். காங்கிரசு அரசு 1939ஆம் ஆண்டு பதவி விலகியதை ஒட்டி சென்னை மாகாண பிரித்தானிய ஆளுநர் 'எர்ஸ்கின் பிரபு' பிப்ரவரி 1940ஆம் ஆண்டில் இந்தக் கட்டாய இந்திக் கல்வியை விலக்கினார்.

**2.சமூக மறுமலர்ச்சி**

- 19 ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் இந்திய சமூகம் ஜாதி சார்ந்ததாகவும், சீரழிந்ததாகவும், இறுக்கமாகவும் இருந்தது.

KAMARAJ WOMENS COLLEGE

- பதினெட்டாம் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர்களால் இந்தியாவைக் கைப்பற்றியது, இந்திய சமூக நிறுவனங்களின் சில தீவிர பலவீனங்களையும் குறைபாடுகளையும் அம்பலப்படுத்தியது.

- ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்தபோது, அவர்கள் ஆங்கில மொழியையும் சில நவீன யோசனைகளையும் அறிமுகப்படுத்தினர். இந்த கருத்துக்கள் சுதந்திரம், சமூக மற்றும் பொருளாதார சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் மற்றும் நீதி ஆகியவை இந்திய சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

- இதன் விளைவாக, பல தனிநபர்கள் மற்றும் இயக்கங்கள் சமூகத்தை சீர்திருத்தும் மற்றும் புத்துயிர் பெறுவதற்கான நோக்கத்துடன் சமூக மற்றும் மத நடைமுறைகளில் மாற்றங்களைக் கொண்டுவர முயன்றன.

- இந்த முயற்சிகள், கூட்டாக மறுமலர்ச்சி என்று அழைக்கப்படும், சிக்கலான சமூக நிகழ்வுகள். இந்தியா ஆங்கிலேயர்களின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோது இந்த நிகழ்வு நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

- ராஜா ராம் மோகன் ராய், ஈஸ்வர் சந்த் வித்யாசாகர், தயானந்த சரஸ்வதி போன்ற சில அறிவொளி பெற்ற இந்தியர்கள் மற்றும் பலர் மேற்குலகின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் போராடி சமூகத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டுவரத் தயாராக இருந்தனர்.

**தமிழ் மறுமலர்ச்சி**

காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனிதநேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக் கண்டத்தின் சமூகப் - பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. நவீன தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது. தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன. அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின. அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின. சமயச்சார்பற்ற எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

KAMARAJ WOMENS COLLEGE

**அச்சுத் தொழில்நுட்பத்தின் வருகை**

ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும். மிக முன்னதாக 1578இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகம் கோவாவில் வெளியிடப்பட்டது. 1709இல் முழுமையான அச்சகம் சீகன்பால்கு என்பவரால் தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது. தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812இல் வெளியிடப்பட்டது. இதன் விளைவாக இக்காலப் பகுதியில் மிகவும் பழமையான செவ்வியல் தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதில் தமிழ் அறிஞர்களிடையே புத்தெழுச்சி ஏற்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களான சி.வை. தாமோதரனார் (1832-1901), உ. வே. சாமிநாதர் (1855-1942) போன்றவர்கள் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களை மீண்டும் கண்டறிவதற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தனர். சி.வை. தாமோதரனார் பனையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். அவர் பதிப்பித்த நூல்களில் தொல்காப்பியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம், கலித்தொகை மற்றும் சூளாமணி ஆகியவை அடங்கும். தமிழறிஞர் மீனாட்சி சுந்தரனாரின் மாணவரான உ.வே. சாமிநாதர் செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களான சீவகசிந்தாமணி (1887), பத்துப்பாட்டு (1889), சிலப்பதிகாரம் (1892), புறநானூறு (1894), புறப்பொருள் வெண்பா மாலை (1895), மணிமேகலை (1898), ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904) ஆகியவற்றை வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

இவ்வாறு பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது தமிழ் மக்களிடையே தங்கள் வரலாறுமரபு, மொழி, இலக்கியம் மற்றும் சமயம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது. நவீனத் தமிழர்கள் தங்களது சமூகப் பண்பாட்டு அடையாளங்களை, பண்டைய தமிழ் செவ்வியல் இலக்கியங்கள் வாயிலாக கண்டறிந்தனர். அவை மொத்தத்தில் சங்க இலக்கியங்கள் என்றழைக்கப்படுகின்றன.

1816 இல் புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவிய கு.று. எல்லிஸ் (1777-1819, தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக் குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ - ஆரியக்குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை எனும் கோட்பாட்டை உருவாக்கினார். ராபர்ட் கால்டுவெல் (1814-1891) திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப்பட்ட நூலில் இக்கோட்பாட்டை 1856இல் விரிவுபடுத்தினார். திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அப்படியான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினார்.

KAMARAJ WOMENS COLLEGE

இக்காலகட்டத்தைச் சேர்ந்த அறிவார்ந்த தமிழர்கள் தமிழ் / திராவிட / சமத்துவம் மற்றும் சமஸ்கிருதம் / ஆரியம் பிராமணியம் ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகளை அடையாளம் கண்டுகொண்டனர். அவர்கள் தமிழ் மொழியே திராவிடர்களின் மொழியென்றும் தமிழர்கள் பிராமணர்கள் அல்ல என்றும் அவர்களின் சமூக வாழ்வில் சாதிகளில்லை, பாலின வேறுபாடில்லை, சமத்துவம் நிலவியது எனவும் வாதிட்டனர். தமிழ்நாட்டில் திராவிட உணர்வு தோன்றி வளர்வதற்கு தமிழ் மறுமலர்ச்சி பங்களிப்பைச் செய்தது. இச்சிந்தனைகள் பி. சுந்தரனாரால் (1855-1897) எழுதப்பெற்ற மனோன்மணியம் எனும் நாடக நூலில் இடம் பெற்றுள்ள தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில் மெய்பிக்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்ப வளர்ச்சி**

தொழிநுட்பம் என்பது பொருட்கள் அல்லது சேவைகள் உற்பத்தி செய்ய பயன்படும் அறிவியல் நுட்பங்களின் தொகுப்பு. தொழிநுட்பம் கருவிகள், கைவினைகள் முதலியவற்றின் பயன்பாட்டுடனும், அவை எவ்வாறு அவற்றைப் பயன்படுத்துவோர் தமது சூழலைக் கட்டுப்படுத்தவும், அதனோடு இயைந்து வாழவும் கூடிய தகுதியில், தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர் என்பதுடனும் தொடர்புள்ள ஒரு பரந்த கருத்துரு ஆகும். எனினும் ஓர் இறுக்கமான வரைவிலக்கணம் இதற்குக் கொடுக்க முடியாது. தொழிநுட்பம் பொறிகள், வன்பொருட்கள், பயன்பாட்டுப் பொருட்கள் போன்ற மனித இனத்துக்குப் பயன்படும் பொருள்களைக் குறிக்கக்கூடும். ஆனால் இது இன்னும் பரந்த முறைமைகள், அமைப்பு முறைகள், நுட்பங்கள் என்பவற்றையும் குறிக்கக்கூடும். இச் சொல்லைப் பொதுப் பொருளில் ஆள்வதுடன், குறிப்பிட்ட துறைகள் சார்பாகவும் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, கட்டுமானத் தொழினுட்பம், உயிர்மருத்துவப் பொறியியல் போன்ற பயன்பாடுகள் குறிப்பிட்ட துறைகள் சார்ந்தவையாகும். இவை தவிர பல நன்மைகளும் உண்டு

தொழில்நுட்ப வரலாறு (History of Technology) என்பது கருவிகளையும் நுட்பக் கூறுகளையும் குறித்த கண்டுபிடிப்புகளின் வரலாறு ஆகும். இதனை மனிதத்தின் வரலாற்றோடு பலவழிகளில் ஒப்பிடலாம். மனிதன் முன்னேறியதால் கருவிகள் உருவாகின; கருவிகள் பயன்பாட்டால் மனிதன் முன்னேறினான். தொழில்நுட்பங்களால் அறிவியல் வளர்ச்சி வாய்த்தது; அறிவியல் வளர்ச்சி செல்லாதவிடங்களுக்குச் செல்லவும், பேரண்டத்தின் இயல்பை ஆராயவும் வழி வகுத்தது.

தொழில்நுட்ப படைப்புகள் பொருளாதாரத் தேவைகளால் எழுந்தன. தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளில் தாக்கமேற்படுத்துகின்றன; சமூகத்தால் தொழில்நுட்பமும் தாக்கமடைகிறது. படை வலியை வளர்க்கவும் காட்சிப்படுத்தவும் தொழில்நுட்பங்கள் உதவியுள்ளன.



KAMARAJ WOMENS COLLEGE

**தொழில்நுட்ப வளர்ச்சியை அளவிடுதல்**

பல சமூகவியலாளர்களும் மனிதவியலாளர்களும் சமூக மற்றும் பண்பாட்டுப் படிமாற்றத்தைக் குறித்த சமூக கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். லெவிஸ் எச்.மோர்கன், லெஸ்லி வைட், கெர்கார்ட் லென்ஸ்க்கி போன்றவர்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மனித நாகரிக வளர்ச்சிக்கான முதன்மை காரணிகளாக கருதுகின்றனர். மோர்கன் கருத்துப்படி சமூக படிமாற்றத்தின் மூன்று முதன்மை நிலைகளான விலங்காண்டி நிலை, காட்டுமிராண்டி நிலை மற்றும் நாகரிக நிலைகளை தொழில்நுட்ப மைல்கற்களைக் கொண்டு வரையறுக்கலாம். விலங்காண்டி காலத்தில் தீ, வில், பாண்டத்தொழில் போன்றவையும், காட்டுமிராண்டி காலத்தில் வீட்டு விலங்குகள், வேளாண்மை, உலோக வேலை போன்றவையும், நாகரிக காலத்தில் அகரவரிசை, எழுத்து போன்றவையும் முதன்மைத் தொழில்நுட்பங்களாக விளங்கின.

குறிப்பிட்ட கண்டுபிடிப்புகளைத் தவிர்த்து, பண்பாட்டுப் படிமாற்றத்தை அளவிட வைட் ஆற்றலைப் பயன்படுத்த முடிவு செய்தார். வைட்டின் கூற்றுப்படி, "ஆற்றலைக் கட்டுப்படுத்துவதே பண்பாட்டின் முக்கியக் கூறு" ஆகும். மனித வளர்ச்சியின் ஐந்து நிலைகளை வைட் இவ்வாறு பிரிக்கிறார்:

- மனிதன் தனது உடற்தசைகளின் ஆற்றலை பயன்படுத்துதல்
- வீட்டு விலங்குகளின் ஆற்றலைப் பயன்படுத்துதல்
- தாவரங்களின் ஆற்றலைப் பயன்படுத்துதல் (வேளாண்மைப் புரட்சி).
- இயற்கை கனிம வளங்களின் ஆற்றலைப் பயன்படுத்துதல்: நிலக்கரி, பாறை எண்ணெய், இயற்கை எரிவளி
- அணுசக்தியைப் பயன்படுத்துதல்

மனித இனத்தின் தொழிநுட்பப் பயன்பாடு, இயற்கை வளங்களை எளிமையான கருவிகளைச் செய்வதற்குப் பயன்படுத்தியதுடன் தொடங்குகிறது. வரலாற்றுக்கு முந்திய கண்டுபிடிப்புக்களான, தீயைக் கட்டுப்படுத்திப் பயன்படுத்தல், உணவு வளங்களைப் பெருக்கிக் கொள்ளவும், சில்லின் கண்டுபிடிப்பு போக்குவரத்துச் செய்வதற்கும், சூழலைக் கட்டுப்படுத்துவதற்கும் உதவின. பிந்திய காலக் கண்டுபிடிப்புக்களான, அச்சியந்திரம், தொலைபேசி, இணையம் என்பன தொடர்புகளுக்கான புறநிலைத் தடைகளைக் களைந்ததுடன், மனிதர்கள் உலக அளவில் எளிதாக தொடர்பு கொள்ள வழி வகுத்தன.

KAMARAJ WOMENS COLLEGE

# அலகு - 5

## மொழிப்பயிற்சி

**நிறுத்தக்குறிகள்**

நிறுத்தக்குறிகள் பேச்சின் ஒலிப்பு வேறுபாடுகளை உரைநடையில் காட்டவும், செய்திப் பரிமாற்றத்தில் குழப்பம் ஏற்படாமல் தவிர்க்கவும், கருத்துத் தெளிவு துலங்கவும், படிப்பவரின் அக்கறையை தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் பயன்படும் குறிகளாகும்.

**பரவலாகப் பயன்பாட்டில் உள்ள நிறுத்தக்குறிகள் பின்வருவன:**

1. கால்புள்ளி (தமிழ் நடை) – (,)
2. அரைப்புள்ளி (தமிழ் நடை) – (;)
3. முக்கால்புள்ளி (தமிழ் நடை) -(:)
4. முற்றுப்புள்ளி (தமிழ் நடை) – (.)
5. புள்ளி (தமிழ் நடை) – (.)
6. முப்புள்ளி (தமிழ் நடை) – (...)
7. கேள்விக்குறி (தமிழ் நடை) -(?)
8. உணர்ச்சிக்குறி (தமிழ் நடை) – (!)
9. இரட்டை மேற்கோள்குறி (தமிழ் நடை) – (" ")
10. ஒற்றை மேற்கோள்குறி (தமிழ் நடை) – (' ')
11. தனி மேற்கோள்குறி (தமிழ் நடை) – ( ' )
12. மேற்படிக்குறி (தமிழ் நடை) – ( " )
13. பிறை அடைப்பு (தமிழ் நடை) – ( )
14. சதுர அடைப்பு (தமிழ் நடை) – [ ]
15. இணைப்புக்கோடு; இணைப்புக்கோடு (தமிழ் நடை); இடைக்கோடு - ( - )
16. சாய்கோடு (தமிழ் நடை) – (/)
17. அடிக்கோடு (தமிழ் நடை) – (_)
18. உடுக்குறி (தமிழ் நடை) – (*)

KAMARAJ WOMENS COLLEGE

**கலைச்சொற்கள் என்றால் என்ன?**

- கலைச்சொற்கள் என்பது ஒவ்வொரு துறைக்கும் பயன்படுத்தப்படும் சொல்லாகும். சுலபமாக சொல்ல வேண்டும் என்றால் மற்ற மொழிகளில் உள்ள சொற்களை அந்தந்த துறையில் உள்ளவர்கள் அவர்களின் துறைக்கு ஏதுவாக பயன்படுத்த உருவாக்கப்பட்டதாகும். அதற்கு கலைச்சொல் என்று பெயர்.
- தமிழில் கலைச்சொல் என்றும் ஆங்கிலத்தில் Glossary என்றும் பயன்படுத்தப்படுகிறது.

**ஒரு சொல் பல பொருள் தரும் சொற்கள்..!**

தமிழ் உரைநடை மற்றும் செய்யுள்களில் ஒரு பொருளைக் குறிக்க பல சொற்கள் இருக்கும். உதாரணமாக சூரியனை எடுத்துக்கொள்வோம். சூரியனை “சூரியன்” என்று நாம் அழைத்தாலும், அதற்கு தமிழில் வேறுப்பட்ட சில பெயர்கள் இருக்கின்றன. ஞாயிறு என்றாலும் சூரியனைக் குறிக்கும், கதிரவன் என்றாலும் சூரியனைக் குறிக்கும், ஆதவன் என்றாலும் சூரியனைக் குறிக்கும். பகலோன் என்றாலும் சூரியனைக் குறிக்கும். பரிதி என்றாலும் சூரியனையே குறிக்கும் சொல்லாகும். அந்த வகையில் இந்த பதிவில் ஒரு சொல் பல பொருள் தரும் சொற்கள் என்னென்ன இருக்கிறது என்பதை பற்றி பார்ப்போம்.

**தமிழ் கலைச்சொற்கள்:**

**கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| Hotspot | பகிரலை |
| Broadband | ஆலலை |
| Online | இயங்கலை |
| Offline | முடக்கலை |
| Thumbdrive | விரலி |
| GPS | தடங்காட்டி |
| CCTV | மறைகாணி |
| OCR | எழுத்துணரி |

KAMARAJ WOMENS COLLEGE

**விஞ்ஞான கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| Whats App | புலனம் |
| You Tube | வலையொளி |
| Instagram | படவரி |
| WeChat | அளாவி |
| Messenger | பற்றியம் |
| Twitter | கீச்சகம் |

**கலைச்சொற்கள்**

**தமிழ் கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| Thumbnail | சிறுபடம் |
| Meme | போன்மி |
| Print Screen | திரைப் பிடிப்பு |
| Inkjet | மைவீச்சு |
| Laser | சீரொளி |

**கலைச்சொற்களின் வகைகள்:**

1. தொழில்நுட்ப கலைசொற்கள்
2. புள்ளிவிபரவியல் சொற்கள்
3. அமைப்பியல் கலைச்சொற்கள்
4. தாவரவியல் கலைச்சொற்கள்
5. வேதிப் பொறியியல்
6. வேளாண்மை
7. மண்ணியல்
8. வேதியியல் அருஞ்சொற்கள்

KAMARAJ WOMENS COLLEGE

9. கணிதத்துறைச் சொற்கள்
10. இயற்பியத்துறைச் சொற்கள்
11. விலங்கியத் துறைச்சொற்கள்
12. இயல்களின் தொகுப்பு
13. அலுவலகப் பயன்பாடுகள்
14. கணிப்பொறி தொடர்புடைய சொற்கள்
15. இணையம் தொடர்புடைய சொற்கள்
16. பிணையம் தொடர்புடைய சொற்கள்
17. தரவுத்தளம் தொடர்புடைய சொற்கள்
18. செல்பேசி தொடர்புடைய சொற்கள்
19. உந்துவண்டி தொடர்புடைய சொற்கள்
20. ஒப்புமையியல் சொற்கள்
21. பறப்பியல் தொடர்புடைய சொற்கள்
22. மின்னியல் சொற்கள்
23. நிதியியல் தொடர்புடைய சொற்கள்
24. புவியியல் தொடர்புடைய சொற்கள்
25. சட்டம் தொடர்புடைய சொற்கள்
26. உடலியல் சொற்கள்
27. மின்திறனியல் சொற்கள்
28. உளவியல் சொற்கள்

**தொழில்நுட்ப கலைசொற்கள்**

| | |
|---|---|
| Absolute Coordinates | நேர் ஒருங்கிணைப்புகள் |
| Absolute Disk Sectors | நேர் வட்டுப் பகுதி |
| Absolute Link | முற்றுத் தொடுப்பு |
| Abscissa | கிடைத்தூரம் |
| Absolute Coordinates | நேர் ஒருங்கிணைப்புகள் |

KAMARAJ WOMENS COLLEGE

| | |
|---|---|
| Absolute Disk Sectors | நேர் வட்டுப் பகுதி |
| Abacus | பரற்கட்டை, மணிச்சட்டம். |
| Back | முந்தைய |
| Back Quote | பின் மேற்கோள்குறி |
| Back Up | காப்பு |
| Babble | பிதற்று |
| Back Plane | பின்தளம் |

**மொழிபெயர்ப்பு**

மொழியாக்கம் அல்லது மொழிபெயர்ப்பு என்பது மூல மொழியில் உள்ள சொல் அல்லது சொற்றொடர்களை (விடயத்தை எந்தவொரு மேலதிகமான உட்சேர்த்தலுமின்றி), பொருள் மாறாமல் மற்றொரு மொழிச் சொற்களை கொண்டு இலக்கு மொழியில் (அறியத் தருதல் ஆகும் இங்கு மேலதிகமான உட்சேர்த்தல் என்பதாவது, மூல மொழியில் குறிப்பிடப்பட்ட விடயத்திற்கு மேலதிகமாக இலக்கு மொழியில் இணைத்தல் என்பதாகவே பொருள்படும். மாறாக தெளிவாக்கல் என்பது எழுத்துக்கு முந்தையதாகஇ பேச்சை வேறுமொழியில் தருவதாகும். மொழியாக்கம் எழுதப்பட்ட இலக்கியத்தை அடுத்தே உருவானது; சுமேரியர்களின் கில்கமெசு காப்பியத்தை (கி.மு. 2000 வில்) தென்மேற்கு ஆசிய மொழிகளில் பகுதியாக மொழிபெயர்க்கப்பட்டது

மொழிபெயர்ப்பாளர்கள் மூலமொழியில் உள்ள மரபுத்தொடர்களையும் பயன்பாட்டு பாணிகளையும் மாற்றுமொழி ஆக்கத்தில் புழங்கும் தீவாய்ப்பு உள்ளது. அதேநேரம் இத்தகைய இறக்குமதிகளால் இலக்குமொழி வளப்படுத்தப்பட்டுள்ள நிகழ்வுகளும் உள்ளன. மொழிபெயர்ப்பாளர்களால் பல மொழிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன

தொழிற்புரட்சிக்குப் பிறகு, வணிக ஆவணங்களின் தேவைக்காக 18வது நூற்றாண்டின் நடுவிலிருந்து சில மொழிபெயர்ப்பு கூறுகள் முறையான வடிவில் இதற்கென தனிப்பட்ட பள்ளிகளிலும் தொழில்முறை சங்கங்களிலும் கற்பிக்கப்பட்டன.

KAMARAJ WOMENS COLLEGE

**வரலாறு**

கி.மு.240-இல் இலீவியசு அந்திரோனிகசு என்பார் கிரேக்க மொழியில் ஓமர் எழுதிய ஒடிசி என்ற காப்பியத்தை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்ததே தொன்மையாகும். இதன்பின், சிசிரோ, காட்டலசு முதலானோர் பண்டைக் கிரேக்க இலக்கிய படைப்புகளையும் பிற துறைசார் நூல்களையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தனர்.

கி.பி.எட்டாம் நூற்றாண்டில் அரேபியர்கள் பகுதாது நகரில் மொழிபெயர்ப்பு மையம் ஒன்றை நிறுவி கிரேக்க மொழியிலிருந்து, மெய்யியல், மருத்துவம், வானநூல், உடலியல், பொருளியல், எண்ணியல், சொற்களஞ்சியம் ஆகியவற்றை அரேபிய மொழியில் உருவாக்கினர்.

**ஐரோப்பாவில் மொழிபெயர்ப்பு**

கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் சுபெயின் நாட்டிலுள்ள டொலடோவில் அரபு மொழியிலிருந்த யுகிலிட்சின் கொள்கைகள், குரான், அறிவியல் நூல்கள் முதலானவை இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. அதன்பின், 15 ஆம் நூற்றாண்டில் விவிலியம் மற்றும் சமய நூல்கள் எபிரேயம், ஆங்கிலம், பிரெஞ்சு, செருமன், இடச்சு மொழிகளில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

**இந்தியாவில் மொழிபெயர்ப்பு**

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் கிறித்தவ சமயத்தைப் பரப்பிடும் பொருட்டு இந்திய மொழிகளில் விவிலிய கருத்துகள் மொழிபெயர்த்து வழங்கப்பட்டன. பிறகு, இலக்கியம், தத்துவம், மருத்துவம், வேதங்கள், அறிவியல் சார்ந்த நூல்கள் ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன.

மொழிபெயர்ப்பிற்கு சலிக்காத உழைப்பு தேவையிருப்பதால் 1940களில் பொறியியலாளர்கள் தானியக்கமாக மொழிபெயர்க்க (இயந்திர மொழிபெயர்ப்பு) அல்லது மனித மொழிபெயர்ப்பாளருக்கு துணையாக இருக்க கருவிகளை உருவாக்கி வருகிறார்கள். இணையத்தின் வளர்ச்சி உலகளவில் மொழிபெயர்ப்பு சேவைகளுக்கான சந்தையை விரிவுபடுத்தி உள்ளது. மேலும் இடைமுக மொழியின் உள்ளூராக்கலுக்கும் வழிவகுத்துள்ளது.

மொழிபெயர்ப்பின் கோட்பாடு, விவரிப்பு, செயற்பாடு ஆகியவற்றைக் குறித்த முறையான கல்வியை மொழிபெயர்ப்பியல் வழங்குகிறது.

KAMARAJ WOMEN'S COLLEGE

**மொழிபெயர்ப்பின் தேவைகள்**

மொழி என்பது தொடர்பாடலுக்கு இன்றியமையாததொரு ஊடகமாகும். மேலும் இவ்வுலகில் சுமார் 6500 மொழிகள் பேசப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. இவ்வுலகில் உள்ள அனைவராலும் அனைத்து மொழிகளிலும் தங்களது தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியாது, அதாவது அனைவருக்கும் அனைத்து மொழிகளும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதாகும். இச்சந்தர்ப்பத்தில்தான் மொழிபெயர்ப்பு என்பது அவசியமாகின்றது. மொழிபெயர்ப்பானது தொடர்பாடலை இலகுபடுத்தவும், மற்றவரினது கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளை பரிச்சயமான மொழியில் புரிந்து கொள்வதற்கும் உதவுகின்றது. பெறுமதிமிக்க ஆவணங்கள், புத்தகங்கள், கட்டுரைகள், போன்ற பல்வேறு விடயங்களில் மொழிபெயர்ப்பின் தேவைப்பாடு வேண்டப்படுகின்றது. எழுத்தாளர்களின் கருத்துகள் மற்றும் சிந்தனைகள் ஆகியன மொழிபெயர்ப்பின் மூலமாகவே விரிபுபடுத்தப்படுகின்றது.

**மொழிபெயர்ப்பாளர்**

மிகவும் பொறுப்பு வாய்ந்ததொரு தொழிலாகவே கருதப்படுகின்றது. மொழிபெயர்ப்பாளர் என்பவர் நிச்சயமாக தேடலை மேற்கொள்ளுபவராகவே இருக்க வேண்டும். அதுவே அவரை சிறந்த மொழிபெயர்ப்பாளராக சமூகத்திற்கு அடையாளங் காட்டும். பல்வேறு துறைகள் பற்றிய அறிவு மற்றும் தெளிவுத்தன்மையானது ஒரு மொழிபெயர்ப்பாளரை ஏனைய சாதாரன மக்களிடமிருந்து வேறுபிரிக்கின்றது. வினைத்திறனானதொரு மொழிபெயர்ப்பு வெளியீட்டை வழங்குவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். மொழிபெயர்ப்பாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்:

1. கிரகித்தல் மற்றும் எளிதாக புரிந்து கொள்ளல் - மொழிபெயர்ப்பின் மிகவும் முக்கியமானதொரு விடயமாகவே இது உற்று நோக்கப்படுகின்றது. அதாவது மூல மொழியின் உள்ளடக்கத்தை இலகுவாக விளக்கிக் கொள்ளும் போதுதான் மொழிபெயர்ப்பை இலகுவாகவும், விரைவாகவும், வினைத்திறனாகவும் மேற்கொள்ள முடியும்

2. நேர முகாமைத்துவம் - மொழிபெயர்ப்பாளர் கொண்டிருக்க வேண்டிய மிகவும் பிரதானமான பண்புகளில் ஒன்று. குறிப்பிட்ட நேரத்திற்குள் குறிப்பிட்ட மொழிபெயர்ப்பை பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாட்டை மொழிபெயர்ப்பாளரொருவர் கொண்டிருப்பது அவசியமாகும். அதுவே அவரின் வெற்றிக்கும் மூலமாகும்.

KAMARAJ WOMENS COLLEGE

3. தேடல் மற்றும் அடையாளங்கானல் - நிச்சயமாக மொழிபெயர்ப்பாளர் ஒருவர் மூல மற்றும் இலக்கு மொழிகளில் மிதமிஞ்சிய பாண்டித்தியம் பெற்றொருவராக இருக்க மாட்டார். ஆனால்இ பல்வேறு விடயங்களின் மீதான தேடல்கள் மூலம் மென்மேலும் தன்னை மெருகூட்டிக் கொள்ளும் அளவுக்கு தயார்படுத்தலாம். இணையப் புரட்சியினால் தேடல்களை மேற்கொள்ளலானது இன்றைய சூழலில் மிகவும் இலகுபடுத்தப்பட்டதொரு முறையாகவே மாற்றங்கண்டுள்ளது.

**மொழிபெயர்ப்பின் சிறப்பியல்புகள்**

மொழிபெயர்ப்புப்பின் தனித்துவத்தை மொழிபெயர்ப்பின் சிறப்பியல்புகள் வெளிப்படுத்துகின்றன. இப்பண்புகள் நான்கு வகைப்படும். அவையாவன:

1. வரிவடிவம்
2. ஒலி வடிவம்
3. உணர்ச்சி
4. பொருளுணர் திறன்

இது தவிர, எளிய மொழிநடை, ஆற்றொழுக்கான வாசிப்புத் தன்மைக்கு இடங்கொடுத்தல், பொருள் நயத்திற்கு முக்கியத்துவம் அளித்தல், மயக்கத்திற்கு இடமளிக்காமை, கருத்துத் தெளிவு, பொதுவழக்குச் சொற்களைப் பயன்படுத்துதல், மூல ஆசிரியரின் கருத்து, உணர்ச்சிக்கு மட்டுமே வாய்ப்பளித்தல், மூலமொழிச் சொல்லிற்கு நிகரான சொற்களை அகராதியைக்கொண்டு பெறுமொழியை வளப்படுத்துதல் போன்ற பண்புகளை மனத்தில்கொண்டு மொழிபெயர்ப்புப் பணி மேற்கொள்ளப்படுதல் நல்லது.

KAMARAJ WOMENS COLLEGE